Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
FRIDAY, MAY 20, 2022

வெள்ளிக்கிழமை மே 20, 2022 | ஒளி: 08 கதிர்: 001 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## பாண் ரூ.170



450 கிராம் நிறை கொண்ட பாண் ஒன்றின் விலை 30 ரூபாயாலும், ஏனைய பேக்கரி உற்பத்திப் பொருட்கள் தலா 10 ரூபாயாலும் அதிகரிக்கப்படும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம், நேற்று (19) அறிவித்தது.

தொடர்ச்சி P2

அமைச்சர்களுக்கு

# சம்பளம் மற்றும் சலுகைகள் கிடையாது

பா.நிரோஷ்

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமையில் அரசாங்கத்தில் அமைச்சர்களாக பதவியேற்போர், அமைச்சர்களுக்கான சம்பளம் மற்றும் சலுகைகளை பெற்றுக்கொள்ளாத வகையில் தீர்மானங்களை எடுத்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று எரிபொருள் நெருக்கடி நிலைமை தொடர்பில் உரையாற்றும் போதே பிரதமர் இதனை தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# இரு மருந்துகளுக்கு இணங்கினார் சஜித்

பா.நிரோஷ்



நாட்டில் முக்கிய சில மருந்து வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் அதில் சிலவற்றை பெற்றுத்தர உதவ வேண்டுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதான எதிர்க்கட்சியிடம் விடுத்த வேண்டுகோளை ஏற்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இரு முக்கிய மருந்துகளை பெற்றுத்தருவதாக உறுதியளித்தார்.

தொடர்ச்சி P2

# வளைத்துப்போடும் விளையாட்டை நிறுத்தவும்

பா.நிரோஸ்

பாராளுமன்ற கலாசாரம் மாற்றியமைக்கப்பட வேண்டுமென கூறும் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சுப் பதவிகளுக்கு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை வளைத்துப்போடும் விளையாட்டுகளை உடனடியாக நிறுத்த வேண்டுமென ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஆளும், எதிர்க்கட்சியாக இருந்துகொண்டே ஒன்றாக செயற்படுவோம். ஆனால் எதிர்க்கட்சியில் இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களை வளைத்துப்போடும் விளையாட்டுகளை

தொடர்ச்சி P2

# ஆஸி செல்ல முயன்ற

## 40 பேர் கிழக்கில் கைது



சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்கு படகில் செல்ல முயன்ற 12 வயது சிறுவன் மற்றும் 5 பெண்கள் உட்பட 40 பேர் கடற்படை மற்றும் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு கடற்கரையில் இருந்து நேற்று (19) அதிகாலை 2 மணியளவில், படகு மூலம் அவுஸ்திரேலியா செல்ல முயன்ற 21 பேர் விசேட அதிரடிப்படையினரால் கைது

தொடர்ச்சி P2

# உணவுப் பஞ்சத்துக்கு முகங்கொடுக்க நேரிடும்

பா.நிரோஷ்



இந்த வருடத்திற்குள் இலங்கை பாரிய உணவு தட்டுப்பாட்டு பிரச்சினையை எதிர்நோக்கும். இதன்போது அதிகளவில் கொழும்பு மாவட்ட மக்களே பாதிக்கப்படலாம் எனவும் தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்த மாவட்டங்களில் வெற்றுக் காணிகளில் பயிர் செய்கைகளை முன்னெடுக்கும் வகையில் வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (19) இந்தக் கருத்துகளை அவர் முன்வைத்தார். அவர் மேலும் கூறுகையில், கொழும்பு நகருக்குள் பெரிய பிரச்சினை உள்ளது. குறிப்பாக எரிபொருளை பெற்றுக்கொள்வதில் சிக்கல்களை மக்கள் எதிர்நோக்குகின்றனர். அதேபோன்று தினசரி

தொடர்ச்சி P2

# 2 ஆம் தவணை ஜூன் 6 ஆரம்பம்

அரச மற்றும் அரச அங்கிகாரம் பெற்ற பாடசாலைகளின் முதலாம் தவணை இன்றுடன் (20) நிறைவடைகின்றது. 2022 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் தவணை ஜூன் 06 ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

வெளிநாட்டு நாணயத்தாள்களை சட்டவிரோதமாக வைத்திருப்போருக்கு

# 2 வாரகால அவகாசம்

ஆர்.யசி

பொதுமக்கள் தமது கையிருப்பில் பணமாக வைத்திருக்கக்கூடிய வெளிநாட்டு நாணயத்தின் பெறுமதியானது 15,000 டொலரில் இருந்து 10,000 டொலராகக் குறைப்பது குறித்து மத்திய வங்கி ஆராய்ந்து வருவதாகவும், சட்டவிரோதமாக அல்லது ஏதேனும் காரணங்களின் அடிப்படையில் அவ்வாறான வெளிநாட்டு நாணயத்தை சேகரித்து வைத்திருப்பவர்கள், இரண்டு வாரங்களுக்குள் வங்கியில் வைப்பு செய்யவோ அல்லது இலங்கை ரூபாவுக்கு மாற்றிக்கொள்ளவோ வேண்டும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.



மத்திய வங்கியால் நேற்று (19) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் ஒருவர் வைத்திருக்கக்கூடிய வெளிநாட்டு நாணய பெறுமதியை 10 ஆயிரம் டொலராகக் கட்டுப்படுத்த முடியுமான சாத்தியப்பாடுகள் குறித்து ஆராயப்படுகின்றது. வெளிநாட்டு நாணயத்தை வங்கியில் வைப்புச்செய்யாமல் வைத்திருப்பவர்கள், அந்தப் பணம் எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்பதை தெளிவுபடுத்த வேண்டும். இருவாரத்தின் பின்னர் வெளிநாட்டு நாணயத்தை கைவசம் வைத்திருப்பவர்களிடமிருந்து தண்டப்பணம் அறவிடப்படும்.

வெளிநாட்டு நாணயங்களை எமக்கு வழங்குவதன் மூலமாக தற்போதைய நெருக்கடி நிலைமைகளை ஓரளவேனும் சமாளிக்கவும், வரிசையில் நிற்கும் மக்களுக்கான அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக்கொள்ளவும் உதவியாக இருக்கும்.

தொடர்ச்சி P2




அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின்

# போராட்ட பேரணி மீது கண்ணீர்ப்புகை பிரயோகம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக, அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால், கொழும்பில் நேற்று (19) நடத்தப்பட்ட போராட்டப் பேரணி, மீது பொலிஸாரால் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ச்சி P2

# தேசத்தின் 13 ஆவது போர் வீரர்களின் நினைவு தினம்




தாய்நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்த போர்வீரர்களை நினைவு கூரும் வகையில் ( ஸ்ரீ ஜயவர்தனபுர போர்வீரர் நினைவுத்தூபியில் (ரணவிரு ஸ்மாரகய) நேற்று (19) ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வின் போது, உயிர்நீத்த போர் வீரர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இதில் பிரதம அதிதியாக ஜனாதிபதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்துகொண்டார். இந்த நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வு), பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்

தொடர்ச்சி P2

எமது அரசியல் பயணத்தில்

# இழக்கக் கூடாதவற்றை இழந்துவிட்டோம்

பா.நிரோஷ்



எம்மிடம் இருந்த சொத்துகளை அடகு வைத்தே அரசியலுக்கு வந்துள்ளோம். இன்னும் அடகு வைக்கப்பட்டவற்றில் மீட்க முடியாத சொத்துகளும் உள்ளன. இவ்வாறு பல்வேறு அர்ப்பணிப்புகளை செய்து பயணித்த எமது அரசியல் பயணத்தில் இழக்கக் கூடாதவற்றை இழந்துவிட்டோம் என முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ சபையில்

தொடர்ச்சி P2

# ‘கோட்டா கோ கம’வில் சிகை அலங்கரிப்பு நிலையம்



அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்ட இடமான காலிமுகத்திடல் ‘கோட்டா கோ கம’வில் சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

42ஆவது நாளை எட்டியுள்ள கோட்டா கோ கமவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோர் இங்கு இலவசமாக சிகை அலங்காரத்தை மேற்கொள்ள

தொடர்ச்சி P2

கச்சத்தீவு கடல் பிராந்தியத்தை

# இந்தியாவுக்கு தாரைவார்க்க திரைமறைவில் முயற்சி

## மீனவர் சமூகம் குற்றச்சாட்டு



லெம்பர்ட்

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை பயன்படுத்தி, வட பகுதி மீனவர்களுக்கு சொந்தமான கச்சத்தீவு கடல் பிராந்தியத்தை, இந்தியாவுக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு திரைமறைவில் முயற்சிகள் நடைபெற்று வருவதாக, மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்கங்களின் சமாஜத்தினர் குற்றஞ்சாட்டினர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சம்பளம் மற்றும் சலுகைகள் கிடையாது

அதன்போது பிரதமர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு காண்பற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் அதேவேளை அமைச்சர்கள் நியமனம் தொடர்பிலும் தீர்மானங்களை எடுத்துள்ளோம். அவர்கள் அமைச்சர்களுக்கான சம்பளத்தை பெற்றுக்கொள்ள மாட்டார்கள். அதேபோன்று அமைச்சர்களுக்கான சலுகைகளை குறைக்கவும் நடவடிக்கை எடுப்போம் என்றார்.

# இரு மருந்துகளுக்கு இணங்கினார் சஜித்

பாராளுமன்றத்தில் நேற்று (19) கருத்தொன்றை முன்வைக்கும்போதே இந்த உறுதிமொழியை எதிர்க்கட்சித்தலைவர் சஜித்பிரேமதாஸ வழங்கினார். அத்துடன் இந்த மருந்துகளை இலங்கைக்கு கொண்டு வருவதற்கு உள்ள நிர்வாக சிக்கல்களை நீக்குமாறும் பிரதமரிடம் கோரிக்கை விடுத்தார்.

இந்த மருந்துக்களை பெற்றுக்கொள்ள தனது கட்சி உறுப்பினர்கள் நிதியுதவிகளை வழங்க தயாராக உள்ளனதாகவும், இதனால் மருந்து க்கொள்வனவுக்காக ரூபா உள்ளபோதும் டொலர் பற்றாக்குறை பிரச்சினை இருக்கிறது. எனவே வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களின் மூலம் டொர்களை பெற்றுக்கொ ள்ளவேண்டியுள்ளது என்றும் எதிர்கட்சித்தலைவர் சுட்டிக்காட்டினார்.

# வளைத்துப்போடும் விளையாட்டை நிறுத்தவும்



ஜனாதிபதியும், பிரதமரும் நிறுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பாராளு மன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில், இலங்கை வங்குரோத்த நிலைக்கு தள்ளப்பட்ட நாடென்ற பெயரை பெற்றுவிட்டது. கடந்த வாரத்தில் முள்ளிவாய்க்கலில் நினைகூரல் இடம்பெற்றபோது இராணுவத்தினர் அதனைத் தடுத்தார்கள். தற்போது ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகவே அனைத்து மக்களும் ஒன்றுகூடி நினைக்கூருகிறார்கள்.

நேற்று காலிமுகத்திடலில் அனைவரும் ஒன்றிணைந்து புலிகள், இராணுவத்தில் உயிரிழந்தவர்கள் அனைவரையும் நினைவுக்கூர்ந்தார்கள். இதுவே மாற்றம் எனவும் தெரிவித்தார்.

# ஆஸி செல்ல முயன்ற

செய்யப்பட்டுள்ளதாகவும் அத்துடன் 2 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, சட்ட விரோதமான முறையில் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 12 வயது சிறுவன் உட்பட 19 பேர், மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் மீட்கப்பட்டு திருகோணமலை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடற்படை புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து, நேற்று அதிகாலை 2 மணியளவில் மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு கடற்கரையை சுற்றிவளைத்த விசேட அதிரடிப்படையினர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன் போது இரு படகுகளில் அவுஸ்திரலியாவுக்கு சட்டவிரோதமாக செல்வதற்கு தயாரான 04 பெண்கள் உட்பட 21 பேரை கைது செய்ததுடன் இரு படகுகளையு மீட்டு காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு , போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் களுவாஞ்சிக்குடியை சேர்ந்த இதன் பிரதான சூத்திரதாரி தலைமறைவாகி உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களை, நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை, திருகோணமலையிருந்து சட்ட விரோதமாக அவுஸ்திரேலியா நோக்கி சென்றவர்களின் படகு, மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி கடற்பரப்பில் வைத்து கடற்படையினரைக் கண்டதும் படகை வேகமாக செலுத்தியதன் காரணமாக இயந்திரம் சூடாகி நீரிழ் மூழ்கடிக்கப்பட்ட நிலையில் கடற்படையினர் அவர்களை மீட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரியவருகிறது.

நேற்று முன்தினம் (18) இடம்பெற்ற இச்சம்பவத்தில் 12 வயது சிறுவன், பெண்ணொருவர், கடத்தல்காரர்கள் இருவர் உள்ளடங்கலாக 19 பேர் கைதாகியதுடன், நிலாவெளி பகுதியை சேர்ந்த இருவரும் இதில் அடங்குகின்றனர் என்று தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(தமிழ்மிரரின் கிழக்கு நிருபர்கள்)

# 2 ஆம் தவணை...

இந்நிலையில், மே. 23 ஆம் திகதியன்று ஆரம்பமாகும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை, ஜூன் 1ஆம் திகதியன்று நிறைவடையும். இந்த பரீட்சையில் தோற்றுவதற்கு 5,17,496 விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்துள்ளனர் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதில், பாடசாலை விண்ணப்பதாரிகள் 4,07,129 பேர் அடங்குகின்றனர், மிகுதி 1,10,367 பேர் தனிப்பட்ட விண்ணப்பதாரிகளாவர். இம்முறை பரீட்சை நடத்துவத்றகு 3844பரீட்சை நிலையங்கள் மற்றும் 542 ஒருங்கிணைப்பு நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது.

# 2 வாரகால அவகாசம்

வெளிநாட்டு பணம் கையிருப்பில் இருக்குமானால் அதனை வங்கியில் வைப்பிலிட்டு அதற்கு ஏற்றால்போல் பெறுமதியான இலங்கை ரூபாவை பெற்றுக்கொள்வதே சிறந்த வழிமு றையாகும் என்றார்.

# போராட்ட பேரணி மீது கண்ணீர்புகை பிரயோகம்

“கோட்டா-ரணில் சதி அரசாங்கத்தை அகற்றுவோம்” என்ற தொனிப்பொருளில் குறித்த பேரணி நெலும் பொக்குண அரங்கத்துக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்டு, கோட்டை ரயில் நிலையத்தை அடைந்த போது பொலிஸாருக்கும் மாணவர்களுக்கும் இடையே பதற்ற நிலை ஏற்பட்டது.

பின்னர், லோட்டஸ் வீதியை அடைந்து ஜனாதிபதி செயலகத்தை நோக்கி செல்ல முற்பட்டபோது, போராட்டக்கார்களைக் கலைப்பதற்காக பொலிஸாரால் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

ஜனாதிபதி மாவத்தை, யோர்க் வீதி, வங்கி மாவத்தை, கீழ் சத்தம் வீதி, முதலிகே மாவத்தை மற்றும் வைத்தியசாலை வீதி ஆகியவற்றுக்குள் பல்கலைக்கழக மாணவர்களின் பேரணி நுழைவதற்கு தடைவிதித்து கோட்டை நீதவான் திலின கமகே, நேற்று (19) கட்டளையிட்டிருந்தார்.

கொழும்பு கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை பரிசீலித்த கோட்டை நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்தார். கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எந்தவோர் அரச நிறுவனத்திலோ, உத்தியோகபூர்வ இல்லத்திலோ நுழைந்து சேதம் விளைவிக்காமலும் அப்பகுதியில் கடமையாற்றும் அதிகாரிகளுக்கு இடையூறு விளைவிக்காமலும் வன்முறை அல்லது சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடாமல் போராட்டத்தை நடத்த முடியும் என, நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

# தேசத்தின் 13 ஆவது போர் வீரர்களின் நினைவு தினம்

மேஜர் ஜெனரல் (ஓய்வு) ஜகத்அல்விஸ், பாதுகாப்புப் பதவி நிலைப் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா ,முப்படைத் தளபதிகள் , பொலிஸ் மா அதிபர், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், ரணவிரு சேவை அதிகார சபையின் தலைவர் மற்றும் முப்படை அதிகாரிகள் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டனர்.




# எரிவாயு நெருக்கடி தீர ஒன்றரை மாதம் செல்லும்

## 35,000 சிலிண்டர்களை நாளாந்தம் விநியோகிக்க தீர்மானம்

எரிவாயுவுக்கான நெருக்கடிக்கு முழுமையான தீர்வு கிடைக்க மேலும் ஒன்றரை மாதங்கள் செல்லும் என்று தெரிவித்த லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் விஜித ஹேரத், நாளாந்தம் 35,000 சிலிண்டர்களை மாத்திரம் சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நிலவும் சீரற்ற வானிலையினால் ஏற்கெனவே நாட்டை வந்தடைந்த கப்பலிலிருந்து எரிவாயுவை இறக்கும் பணிகளில் இடையூறு ஏற்பட்டுள்ளதாகவும் பணிகள் தாமதம டைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

ஓமானிலிருந்து எரிவாயுவை ஏற்றிய மற்றுமொரு கப்பல் நேற்று (19) நாட்டை வந்தடையவுள்ளதாகவும் தாய்லாந்து எரிவாயு நிறுவனத்திடமிருந்து எரிவாயுவை இறக்குமதி செய்யும் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் தாமதம் நிலவுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜூன் மாதத்தின் முதலாவது வாரமளவில் குறித்த நிறுவனத்திடமிருந்து எரிவாயுவை பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாக லிட்ரோ தலைவர் மேலும் தெரிவித்தார்.

# கோட்டாப ராஜபக்‌ஷவின் கீழ் அரசாங்கத்தை உருவாக்க தயாரில்லை

பா.நிரோஷ்

கோட்டாப ராஜபக்‌ஷ அரசாங்கத்தை சர்வதேசம் ஏற்றுக்கொள்ளாது. இதனால் சர்வதேச உதவிகள் கிடைக்காது. அதனால் தான் கோட்டாப ராஜபக்‌ஷவின் கீழ் அரசாங்கத்தை உருவாக்க நாம் தயாரில்லை என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவுமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (19) இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் .

எமது நாடு இன்று முற்றாக சீரழிந்து விட்டது. இதனை நினைத்து நாம் மிகுந்த வேதனையடைகிறோம். இரண்டு தரப்பினரும் இதற்காக வெட்கப்பட வேண்டும். ஜனாதிபதி கோட்டாபவின் தவறான தீர்மானங்களே இதற்கெல்லாம் காரணம்.

புதிய அரசாங்கத்துக்கு ஒத்துழைக்க நாம் தயார். ஆனால் இன்று அமைந்துள்ளது புதிய அரசாங்கமல்ல. எனவே, நாட்டையே சீர்குலைத்த அரசாங்கத்துக்கு என்ன தண்டனை வழங்குவது ? இந்த ஆட்சியாளர்கள் இல்லாத புதிய அரசாங்கமொன்று உருவாக்கப்பட்டால் மட்டுமே நாட்டை மீட்டெடுக்க முடியும். அனைவரும் ஒன்றிணைந்து புதிய அரசாங்கமொன்றை உருவாக்க வேண்டும் என்றார்.

20 ஆவது திருத்தச்சட்டத்தை கொண்டுவந்தபோது எதிர்க்கட்சிகளிடம் எந்தவொரு கலந்துரையாடலும் நடத்தப்படவில்லை. யாரும் பாராளுமன்றத்தில் இல்லாத நேரம் பார்த்து, நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்தி, திருட்டுத்தனமாக இதனை கொண்டுவந்தீர்கள் என்றார்.

# பாண் ரூ.170

அதற்மைய 140 ரூபாயாக இருந்த ஒரு இறாத்தல் பாணின் விலை 170 ரூபாயாக அதிகரிக்கப்படவுள்ளதுடன், நேற்று (19) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் மேற்குறிப்பிட்ட பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படும் என சங்கம் தெரிவித்துள்ளது.

ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலையை 40 ரூபாயால் அதிகரிப்பதற்கு பிறீமா மற்றும் செரண்டிப் நிறுவனங்கள், நேற்று (19) தீர்மானித்தமையே பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு காரணம் என சங்கம் தெரிவித்தது.

மேலும், கோதுமை மாவின் விலையை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் அடுத்த வாரம் அனைத்து பேக்கரிகள் மற்றும் ஹோட்டல்கள் சகல உற்பத்திகளையும் நிறுத்தும் என சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன, நேற்று முன்தினம் (18) தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உணவு பஞ்சத்துக்கு முகங்கொடுக்க நேரிடும்



உணவுகளுக்கு மக்களுக்கு பணம் போதுமாக இல்லை. இந்த விடயங்கள் தொடர்பில் அடுத்த வாரமளவில் கதைக்கவுள்ளேன்.

இதேவேளை உணவுப் பிரச்சனை கொழும்புக்கு மாத்திரமன்றி உலகில் அனைத்து இடங்களிலும் ஏற்படவுள்ளது. உலக வங்கி இதற்காக 30 பில்லியனை ஒதுக்கியுள்ளதாக அறிந்தேன். அதேபோன்று அமெரிக்காவின் நிதி அமைச்சர், திறைசேரி செயலாளரும் உலகம் எதிர்நோக்கவுள்ள மிகப்பெரிய பிரச்சனைக்கு தாம் தயாராகி வருவதாகவும் கூறியுள்ளார். எவ்வாறாயினும் இந்த வருடத்தில் நிச்சயமாக உணவுத் தட்டுப்பாடு ஏற்படும். சில இடங்களில் உணவு இல்லாமல் போகும் என்றும் கூறப்பட்டு ள்ளது. அதில் குறிப்பிடப்படும் நாடுகளில் இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தானும் உள்ளன.

இது தொடர்பில் நாங்கள் வேலைத்தி ட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது. எமக்கு உணவு பயிர் செய்கைகளை செய்ய வேண்டியுள்ளது. கொழும்பு மற்றும் மொரட்டுவ, தெஹிவளை அனைத்து பகுதியிலும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். வரவு செலவு திட்டத்தில் நிவாரண அடிப்படையில் நிதி வழங்க ஆலோசித்து வருகின்றோம். நாங்கள் இதனை ஒன்றிணைந்தே செய்ய வேண்டும். அடுத்ததாக மத்திய, சிறியை கைத்தொழில் வீழ்ச்சியும் ஏற்படும். இதனால் ஏற்படக் கூடிய நிலைமையை கட்டுப்படுத்த மாவட்ட ரீதியில் குழுக்களை அமைத்து வேலைத்திட்டங்களை செய்வோம் என்றார்.

# இழக்கக் கூடாதவற்றை இழந்துவிட்டோம்

தற்போதைய நிலைமையில் ஜனாதிபதி தனது பதவிக் காலம் முடிந்ததும் ஒதுங்கிக் கொள்வது சிறந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (19) நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்துள்ளார். அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நிலையில், மே 9 ஆம் திகதி சம்பவம் தொடர்பில் கவலையடைகின்றேன். ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை ஏற்றுக்கொள்ள முடியாது. யாருடையதேனும் தவறான ஆலோசனையால் அது நடந்துள்ளது. அப்பாவி மக்களே அங்கு வந்துள்ளனர். அவர்கள் பிரதமர் பதவி விலகும் போது ஆசீர்வதிக்கவே வந்துள்ளனர். அதன்போது யாரோ அவர்களை தூண்டியுள்ளனர். இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் பொறுப்புக் கூற வேண்டும். அதன்பின்னர் வீடுகளுக்கு தீ வைத்துள்ளனர். ஹம்பாந்தோட்டை பகுதியிலும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ராஜபக்‌ஷர்களின் அரசியல் வரலாறுகளை பார்க்க வேண்டும். 90 வருடங்களாக அரசியலில் இருக்கின்றோம். நாங்கள் இருந்த சொத்துக்களை அடகு வைத்தே வந்துள்ளோம். இன்னும் அடகு வைக்கப்பட்டவற்றில் மீட்க முடியாத சொத்துக்களும் உள்ளன. இந்நிலையில் ஜனாதிபதி தனக்கு இருக்கும் 2 வருடங்கள் நிறைவடைந்ததும் அவர் விடைபெறுவதே சிறந்தது. நாங்கள் கடந்த 50 வருட அரசியலில் பல்வேறு அர்ப்பணிப்புகளை செய்துள்ளோம். ஆனால் இப்போது அவற்றை இழந்துள்ளோம் என்றார்.

# இந்தியாவுக்கு தாரைவார்க்க திரைமறைவில் முயற்சி

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று (19) மதியம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர்கள் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

சமாசத்தின் செயலாளர் என்.எம். ஆலம் கருத்துரைக்கையில், “இந்தியாவுக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் கச்சதீவு பகுதி வழங்கப்பட இருப்பதாக பரவலாக அறியக்கூடியதாக இருக்கிறது.

“இதன் உண்மைத் தன்மை, மீனவர் கூட்டுறவு சங்கங்களின் தலைவர்களாக செயல்படும் எங்களுக்கே இன்னும் தெரியாது.

“இருப்பினும், இந்தியத் தரப்பினரால் தொடர்ச்சியாக கச்சதீவு பகுதியை இந்திய மீனவர்களுக்கு பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்தை அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

“அதனோடு இணைந்து இன்றைய நாட்டின் பொருளாதார நெருக்கடியை பயன்படுத்தி, ஏதோ ஒரு விடயம் கச்சதீவு தொடர்பாக பேசப்பட்டு கொண்டிருக்கலாம் என்ற ஐயம் எழுகிறது.

“கச்சதீவு இந்தியாவுக்கு வழங்கப்படுமாக இருந்தால் பாரிய பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். “உண்மையில் இந்த கச்சதீவு இலங்கைக்கு உரிமை உள்ளதாக இருந்தபோது கூட இந்திய மீனவர்களால், நாட்டின் வட பகுதி மற்றும் மன்னார் மாவட்ட கடல் பகுதி தொழில்ரீதியான ஆக்கிரமிப்பின் ஊடாகவும் ஏனைய கடத்தல் நடவடிக்கையில் ஊடாகவும் கடலில் உள்ள மீன் வளங்கள் அழிந்து, போதைப்பொருள் கடத்தல் சம்பவங்கள் இங்கு அதிகமாக பதிவாகியுள்ளன என்றார்.

பா. நிரோஸ்

ddnirosh@gmail.com






© Parliament of Sri Lanka

# கடமையேற்பு

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, பிரதி சபாநாயகர் அலுவலகத்தில் தனது கடமைகளை நேற்று (19) பொறுப்பேற்றுக்கொண்டார்.

# 225 பேரும் இணைவது அவசியம்

அரசியலமைப்பை கிழித்தெறிந்துவிட்டு அதிகாரத்தை கைப்பற்ற முடியும் என நினைத்தால், அது நாட்டை சீரழித்துவிடுமென முன்னாள் அமைச்சரும் எம். பியுமான கெஹலிய ரம்புக்வெல்ல சபையில் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று (19) இடம்பெற்ற, கடந்த 9ஆம் திகதி வன்முறை சம்பவங்கள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

53 பில்லியன் டொலரை நாடு கடனாக செலுத்த வேண்டியுள்ளது. ஒருவர் மட்டுமே அதனை பொறுப்பேற்க முடியாது. நெருக்கடியான சூழ்நிலையில் தவறுகளை சரி செய்து நாட்டை கட்டியெழுப்ப அனைவரும் இணைந்து செயற்படுவது அவசியம்.

நாடு பெரும் சவால்களை எதிர்கொண்டுள்ள நிலையில் நாட்டில் 22 மில்லியன் மக்களும் துரதிர்ஷ்டமான நிலையை எதிர்கொண்டுள்ள வேளையில் ஒருவர் மீது ஒருவர் விரல் நீட்டுவது முறையல்ல .நாட்டில் 56,71, 83, 88 - 89 காலங்களில் அழிவுகள் ஏற்படாதிருந்திருந்தால் நாடு தற்போது பெரும் முன்னேற்றம் கண்டிருக்கும். அதற்கிணங்க இன்று நாடு எதிர்கொண்டுள்ள நிலைக்கு அனைத்து அரசாங்கங்களும் பொறுப்பேற்க வேண்டும்.

அதேபோன்று எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் அரசியலமைப்பிற்கிணங்க அதனை மேற்கொள்ள வேண்டும். அதை மீறி செயற்பட்டால் எவருக்கும் அரசாங்கத்தை கொண்டு செல்ல முடியாமல் போகும். பல்வேறு கருத்துகள் இருக்கலாம். எனினும் நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் பாராளுமன்றத்தில் 225 பேரும் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம். அப்போதுதான் நாம் இணைந்து முன்னிலைக்கு செல்ல முடியும் என்றார்.

# லிட்ரோ நிறுவனத்தின் அதிகாரிகளை கோப் குழுவுக்கு அழையுங்கள்

எரிவாயு கப்பல் வந்துள்ள போதும், அதில் உள்ள எரிவாயுவை இறக்குவதில் ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பில் லிட்ரோ நிறுவனத்தின் அதிகாரிகளை பாராளுமன்றத்தின் கோப் குழுவுக்கு அழைத்து விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் சபையில் வலியுறுத்தியுள்ளார். இதன்படி அந்த அதிகாரிகளை இன்றைய தினத்தில் பாராளுமன்றத்திற்கு அழைத்து விசாரித்து அறிக்கை சமர்பிக்குமாறு கோப் குழுவின் தலைவருக்கு பணிப்புரை விடுப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று எரிபொருள் மற்றும் எரிவாயு பிரச்சினைகள் தொடர்பில் உரையாற்றுகையிலேயே பிரதமர் இதனை தெரிவித்துள்ளார். அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிவாயு கப்பல் துறைமுகத்திற்கு வந்துள்ளது. அதில் உள்ள எரிவாயுவை லொறிகள் மூலமே இறக்க வேண்டியுள்ளது. ஆனால் நேற்று (புதன்கிழமை) இரவு 8 மணி வரையில் லொறி வந்திருக்கவில்லை. இதனால் இந்த விடயம் தொடர்பில் லிட்ரோ நிறுவனத்தின் அதிகாரிகள் குழுவை அழைக்க தீர்மானித்துள்ளோம். இதன்படி கோப் குழுவின் தலைவருக்கு நான் கோரிக்கையொன்றை விடுக்கின்றேன். அந்த அதிகாரிகளை அழைத்து விசாரித்து அறிக்கையொன்றை வழங்குங்கள். அவர்கள் வேகமாக இயங்க வேண்டும். ஏன் காலத்தை இழுத்தடித்துக் கொண்டிருக்கின்றனர் என்று தெரியவில்லை என்றார்.

# கடாபியின் நிலைமை கோட்டாவுக்கு வரக்கூடாது

வீதியில் வைத்து பொதுமக்களால் அடித்துக் கொலை செய்யப்பட்ட கடாபியின் நிலைமை தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வருவதை அவர் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஸ்ணன் சபையில் எச்சரித்தார்.



இந்தியாவில் உள்ள யாசகர்கள் கூட உதவும் நிலை இன்று இலங்கைக்கு ஏற்பட்டுவிட்டது. ஜனாதிபதியே நாட்டின் அத்தனை பிரச்சினைகளுக்கும் காரணம். பொருளாதார வீழ்ச்சி, அதன் பின்னர் ஏற்பட்ட அரசியல் ஸ்திரத்தன்மை இன்மை ஆகியவற்றால் நாட்டில் அண்மையில் வன்முறைச் சம்பவங்கள் பரவின. வன்முறைகளை நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அனைத்து பொறுப்புகளையும் புதிய பிரதமர் ரணிலுக்கு வழங்கிவிட்டு, ஜனாதிபதியால் தப்பித்துவிட முடியாது. தற்போது அமலில் உள்ள 20ஆவது திருத்தச் சட்டத்தின்படி அனைத்து அதிகாரங்களும் ஜனாதிபதியிடமே இருக்கிறது. எனவே மீள 19ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டுவந்து அவருடைய அதிகாரங்களை பாராளுமன்றத்துக்கு ஒப்படைத்ததன் பின்னரே அவரால் இதிலிருந்து தப்பிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

## கொழும்பு நகர மக்கள்

# வீதிக்கு இறங்கும் நிலைமை ஏற்படலாம்

எரிவாயு மற்றும் மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால் விரக்தியில் இருக்கும் கொழும்பு நகர மக்கள் வீதிக்கு இறங்கும் நிலைமை ஏற்படலாம். இதனால் அவர்களின் பிரச்சினைகளை தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹுமான் பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பின் நிலைமை மிகவும் மோசமானதாக உள்ளது. கொழும்பு மக்களுக்கு மூன்று வாரங்களாக சமையல் எரிவாயு கிடைக்கவில்லை. எரிவாயு இன்மையால் உணவை பெற்றுக்கொள்ள இருந்த சிறிய உணவகங்களும் மூடப்பட்டுள்ளன. இந்த நகரங்களில் விறகும் கிடையாது. மண்ணெண்ணெய்யும் இந்த மக்களுக்கு பல வாரங்களாக கிடைக்காது இருக்கின்றது. இதனால் அவர்கள் எதிர்வரும் நாள்களில் வீதிக்கு இறங்குவர். இதன்போது அவர்களை அவர் தூண்டிவிட்டார். இவர் தூண்டிவிட்டார் என்று கூற வேண்டாம். அதனால் உடனடியாக கொழும்பு மக்களுக்கு மண்ணெண்ணெய்யையாவது வழங்க நடவடிக்கை எடுங்கள் என்று பிரதமருக்கு நான் கோரிக்கை விடுகின்றேன் என்றார்.

# உணர்ச்சி வசப்படாதீர்கள்

அனுமதி வழங்கப்படாத இடங்களிலிருந்து ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிப்பில் ஈடுபடும்போது எம். பிக்கள் உணர்ச்சிவசப்படுவதை தவிர்க்க முடியாது. அந்தவகையில் பாராளுமன்ற ஊடகவியலாளர்கள் இருவரும் அனுமதிக்கப்படாத இடத்திலிருந்து செய்தி சேகரிக்க முயன்றதாலேயே அவர்களின் செல்போன்களை எம். பி.க்கள் பொறுப்பேற்கவேண்டி ஏற்பட்டதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் வைத்து செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட பாராளுமன்ற ஊடகவிலாளர்கள் இருவரின் செல்போன்களை பொதுஜன பெரமுன எம்.பிக்கள் சிலர் பறிமுதல் செய்தமை தொடர்பில், நேற்று வியாழக்கிழமை பாராளுமன்றம் கூடிய நிலையில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தனது அறிவிப்பை வெளியிடும்போதே இவ்வாறு தெரிவித்ததுடன் மேலும் கூறுகையில்,

பாராளுமன்றத்தின் ஊடக மத்திய நிலையத்தில் இருந்து பாராளுமன்ற ஊடகவியலாளர்களால் காணொளிப்படம் எடுத்தல் மற்றும் குரல் பதிவுகளை மேற்கொள்ள முடியும். குழுக்கூட்டங்கள், நடைபெறும் இடங்களில், ஊடகவியலாளர்களால் குரல் பதிவுகளை செய்யமுடியாது என்றார்.

# கோபா குழுவின் அறிக்கை தயார்

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரின் அரசாங்க கணக்குகள் பற்றிய (கோபா) குழுவின் முதலாவது அறிக்கை அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் (பேராசிரியர்)திஸ்ஸ விதாரணவால் இன்று (20) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. 2021.08.04 முதல் 2021.11.19 வரையான காலப்பகுதியில் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு முன்னிலையில் அழைக்கப்பட்ட 07 அரச நிறுவனங்கள் மற்றும் ஒரு விசேட கணக்காய்வு அறிக்கை தொடர்பான விசாரணை பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், சமூக அபிவிருத்தித் திணைக்களம், மதுவரித் திணைக்களம், குருநாகல் மாநகர சபை, குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம், சுற்றாடல் அமைச்சு, சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் மருத்துவ விநியோக பிரிவால் மேற்கொள்ளப்படும் மருத்துவ விநியோகங்கள், விநியோக முறை தொடர்பில் 2018 மார்ச் 14 ஆம் திகதியிலான கணக்காய்வாளர் நாயகத்தின் விசேட கணக்காய்வு அறிக்கை தொடர்பாக விசாரணை செய்யப்பட்ட தகவல்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## காலிமுகத்திடலில் முள்ளிவாய்க்கால்:

# மாற்றத்துக்கான முன்னுதாரணம்

காலிமுகத்திடலில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வு, மாற்றத்துக்கான ஒரு முன்னுதாரணம் என்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தெரிவித்துள்ளது.



பாராளுமன்றத்தில் வைத்து நேற்று (19) தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, புலம்பெயர்ந்த தமிழர்கள் இலங்கைக்கு வந்து தமது முதலீடுகளை செய்வதற்கு பாதுகாப்பு ஓர் அச்சுறுத்தலாக இருப்பதாகவும் சித்தார்த்தன் சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது.

# எரிவாயு பிரச்சினை தொடர்பில் ஆராய லிட்ரோ நிறுவனத்துக்கு கோப் குழு அழைப்பு

■ பா.நிரோஷ்

தற்பொழுது நிலவும் எரிவாயுப் பிரச்சினை மற்றும் தட்டுப்பாடு தொடர்பில் ஆராயும் நோக்கில் லிட்ரோ நிறுவனத்தை இன்று மு.ப 11 மணிக்கு அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு) அழைத்துள்ளது.

எரிவாயு விநியோக செயற்பாடுகளைத் துரிதப்படுத்த வேண்டும் என பாராளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இது விடயம் தொடர்பில் ஆராய லிட்ரோ நிறுவனத்தை கோப் குழு முன்னிலையில் அழைக்குமாறு பணிப்புரை விடுத்திருந்தார்.



# புதிய எம்.பி உறுதியுரை

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொலன்னறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவின் மறைவை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு எஸ். ஜகத் சமரவிக்ரம, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் நேற்று (19) சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

அண்மையில் இடம்பெற்ற மோதல் சூழ்நிலையில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரல படுகொலை செய்யப்பட்டதுடன், இதனால் பாராளுமன்றத்தில் வெற்றிடமொன்று ஏற்பட்டது. இந்த வெற்றிடத்துக்கு எஸ். ஜகத் சமரவிக்ரமவின் பெயரை குறிப்பிட்டு, அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை கடந்த 17ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டது. அதற்கமையவே, எஸ். ஜகத் சமரவிக்ரம ஒன்பதாவது பாராளுமன்றத்தின் உறுப்பினராக உறுதியுரை எடுத்தார்.

# உடனடியாக எம்.பிக்களின் உணவகத்தை மூடுங்கள்

பாராளுமன்றம் மீது நாட்டு மக்கள் வைத்திருந்த நம்பிக்கை இழக்கப்பட்டுள்ளது. எனவே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பாராளுமன்ற உணவகம் மூடப்பட வேண்டும். அத்தோடு வரப்பிரசாதம், சம்பளத்தை பாதியாக குறைக்க வேண்டும் என சபையில் தெரிவித்த ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா, அவ்வாறு செய்யவில்லை என்றால் பாராளுமன்றம் இல்லாதொழிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.



பாராளுமன்ற உறுப்பினர்கள் எந்த நேரம் வேண்டுமென்றாலும் கொலை செய்யப்படலாம் என்கிற நிலையே காணப்படுகிறது. புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசியலில் படுதோல்வி அடைந்திருந்தாலும், நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் பிரச்சினையை அவரால் தீர்க்க முடியும். எனவே ரணிலுக்கு நாம் தற்போது ஆதரவை வழங்க வேண்டும்.

எதிர்க்க ட்சியினரும் அரசாங்கத்துக்கு வந்து அமைச்சுப் பதவிகளை பெற வேண்டும். சம்பிக்க ரணவக்கவும் அமைச்சுப்பதவியை பெற வேண்டும். நாடு வீழ்ந்துவிட்டது. இதற்கு யார் பொறுப்புக்கூற வேண்டும்? மஹிந்தவா, கோட்டாவா என்பதல்ல பிரச்சினை. அமரகீர்த்தி அத்துகோரளவுக்கு ஏற்பட்ட நிலைமை ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நடப்பதற்கு அதிக காலம் செல்லாது எனவும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடனான யுத்தம்

# சரியான வழியில் வெல்லப்பட்டவில்லை

■ பாறுக் ஷிஹான்



விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற யுத்தமானது சரியான வழியில் வெல்லப்பட்டதாக நான் நினைக்கவில்லை என ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசன் அலி தெரிவித்தார்.

உள்நாட்டு யுத்தம் அல்லது பிரச்சினை என்றால் அது ஒரு பேச்சுவார்த்தை மேசையில் தான் முடிந்திருக்க வேண்டும். ஆனால், இந்தப் போரின் முடிவு, சமாதான முறையில் நிறைவுக்குக் கொண்டு வரப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

நிந்தவூரில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில், சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் நேற்று (19) நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "வடகிழக்கு மாகாண சபையில் முதலமைச்சராக இருந்த வரதராஜ பெருமாள் காலத்தில், ஓர் உறுப்பினராக இருந்துள்ளேன். அது மாத்திரமன்றி வரதராஜ பெருமாள், தமிழீழ பிரகடனம் செய்த போது, வெளிநடப்பு செய்த குழுவிலும் நான் அங்கம் வகித்திருந்தேன்.

"அதாவது, இந்த நாட்டை பிரிப்பதற்கு ஒருபோதும் நாங்கள் உடன்பட மாட்டோம் என வெளியேறினோம். இந்நிலையில் பின்னர் அங்கு பல பிரச்சினைகள் எழுந்தமையால், இந்திய அமைதிப் படையின் உதவியுடன் விசேட விமானத்தில் இரத்மலானை விமான நிலையத்துக்கு நாங்கள் பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டோம்.

மேலும், விடுதலைப் புலிகள் ஓர் இயக்கமாக இருந்தாலும் அந்த இயக்கத்தில் இருந்தவர்கள் விடுதலை புலிகள் என்ற உயரிய சிந்தனைகளில் இருந்தார்களா? என்பதை நாம் சிந்திக்க வேண்டும். அதாவது, விடுதலை புலிகளின் உயர் மட்டத் தலைவர்கள் எனக் கூறப்படுவோர் தற்போது கூட, சிங்களக் கட்சிகளின் உயர் பதவிகளில் வந்து இருக்கின்றார்கள்.

"இவ்வாறானவர்களும் விடுதலைப் புலிகளில் கடந்த காலங்களில் அங்கம் வகித்துள்ளார்கள் என்பதை நாங்கள் புரிந்துகொள்ள முடிகின்றது.

"விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற யுத்தம் வெல்லப்பட்டது என்பதற்காகவே ராஜபக்ஷர்களை மக்கள் ஆட்சிக்குக் கொண்டு வந்தனர். எனினும், இந்த யுத்தம், வெளிநாடு ஒன்றுடன் செய்யப்படவில்லை. இலங்கை பிரஜைகளுடன் தான் இலங்கை அரசாங்கம் யுத்தம் செய்தது. "இந்த யுத்தமானது சரியான வழியில் வெல்லப்பட்டதாக நான் நினைக்கவில்லை. ஒரு போர்க்களத்தில் நின்றுகொண்டு, பொதுமக்களை இராணுவம் சுட்டுத்தள்ளி அல்லது ஒரு விடுதலை இயக்கம் இராணுவத்தைச் சுட்டுத்தள்ளுவதை ஒரு காலமும் யுத்தமோ சமாதானமோ என்று கூற முடியாது.

"சமாதான மேசையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்படவில்லை. மாறாக, பெரும் அழிவு அவலத்துடன் தான் இந்த யுத்தம் அரைகுறையாக நிறைவடைந்துள்ளது என்பதை நான் பார்க்கின்றேன்" என்றார்.

பேரறிவாளனின் விடுதலை மூலம்

# நீதி வென்றிருக்கிறது



பேரறிவாளனின் விடுதலை மூலம் நீதி வென்றிருப்பதாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று (19) அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது, மறைந்த இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் குற்றவாளியாகக் கருதப்பட்டு, 1991.06.11 அன்று தனது 20ஆவது வயதில் சிறை சென்ற பேரறிவாளன், 32 வருட சிறைத் தண்டனைக்குப் பின் நேற்று முன்தினம் (18) விடுதலை செய்யப்பட்டிருப்பது, உலகத் தமிழர்களிடையே தம் வீட்டுப் பிள்ளை சிறை மீண்டிருப்பதைப் போன்ற ஆத்மதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது.

குண்டைத் தயாரிப்பதற்குரிய இரு மின்கலங்களை வாங்கிக் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு சிறையிலிருந்த பேரறிவாளன், அவரது தாயாரான அற்புதம் அம்மாளினதும், அவருக்குத் துணை நின்றவர்களினதும் மூன்று தசாப்தகால பகீரதப் பிரயத்தனங்களின் பின்னர், இந்திய உச்சநீதிமன்றத்தால் நிரபராதி என்று விடுதலை செய்யப்பட்டார்.

இந்தச் செய்தி, தமிழர்களின் வாழ்வை அடியோடு புரட்டிப்போட்ட ரணமும் வலியும் மிக்க மே 18 முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நாளில் கிடைக்கப் பெற்றமை ஆழ்மன மகிழ்வையும் நெகிழ்வையும் தந்துள்ளது.

அதேவேளை, அவருடன் சிறைசென்ற சாந்தன், முருகன், நளினி உள்ளிட்ட ஏனைய அறுவரின் நிலை குறித்த கவலையையும் கேள்வியையும் எழுப்பியுள்ளது. பேரறிவாளனின் விடுதலை தந்திருக்கும் வெற்றிக்களிப்போடு, ராஜீவ்காந்தி கொலைவழக்கில் கைதாகி சிறையிலிருக்கும் ஆறு பேரின் விடுதலை நோக்கிய பயணத்துக்கு எல்லோரும் இணைந்து குரல்கொடுப்போம் என அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



கடும் காற்றால்

# தென்னை விழுந்து முதியவர் பலி

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வீசும் கடும் காற்றால், வீட்டின் முன் நின்ற பட்ட தென்னை மரம் முறிந்து வீழ்ந்ததில், அதன் கீழ் சிக்கிக்கொண்ட முதியவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

வண்ணார்பண்ணை, முருகமூர்த்தி வீதியில் நேற்று முன்தினம் (18) மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், அதே இடத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் ஏகாம்பரநாதன் (வயது-80 ) என்பவரே உயிரிழந்தார்.

தனது வீட்டில் மதியம் சாப்பிட்டுவிட்டு, அலைபேசி கதைத்துகொண்டு, வீட்டு முற்றத்தில் கதிரையில் இருந்தபோதே, அவர் மீது பட்ட தென்னை மரம் காற்றுக்கு அடியோடு சரிந்து வீழ்ந்ததில், சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

அம்பாறை மாவட்ட

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

■ எம். ஏறமீஸ்



அட்டாளைச்சேனை பிரதேசத்தை சேர்ந்த ஊடகவியலாளர் எம்.ஜே.எம். சஜீத், அம்பாறை மாவட்ட சமாதான நீதவானாக, அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.எச். முஹம்மட் ஹம்சா முன்னிலையில், நேற்று முன்தினம் (18) சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

தனது ஆரம்ப கல்வியை அட்டாளைச்சேனை அல் - அர்ஹம் வித்தியாலயத்திலும், உயர்கல்வியை அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையிலும், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி இதழியல் கற்கை நெறியையும் பயின்றுள்ளார்.

அட்டாளைச்சேனைஅல் - ஸஹீட் இளைஞர் கழகத்தின் முன்னாள் தலைவராகவும், பாடசாலை அபிவிருத்தி குழு மற்றும் சிவில் பாதுகாப்பு குழு போன்ற பல்வேறு சமூகநல அமைப்புகளில் பல பதவிகளையும் வகித்து வருகின்றார்.

அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியில் கணினி சேவை உதவியாளராக கடமையாற்றி வரும் இவர், எம்.எச்.எம்.ஜஃபர் - உதுமாலெப்பை உசையுமா ஆகியோரின் மூத்த புதல்வரும் ஆவார்.



# வாழைப்பழங்களின் விலை திடீர் சரிவு

■ பாறுக் ஷிஹான்

கடந்த சில நாள்களாக, அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, கல்முனை, அக்கரைப்பற்று, பொத்துவில் உள்ளிட்ட பகுதிகளில் வாழைப்பழங்களின் விலை சடுதியாக குறைவடைந்துள்ளது.

கதலி வாழைப்பழம் ஒரு கிலோ கிராம் 150 ரூபாய்க்கும், ஆனை வாழைப்பழம் 120 ரூபாய்க்கும், செவ்வாழை 350 ரூபாய்க்கும், சீனிக் கதலி 120 ரூபாய்க்கும், கப்பல் அல்லது கோழி சூடன் வாழைப்பழம் 280 ரூபாய்க்கும், மொந்தன் வாழைப்பழம் 140 ரூபாய்க்கும், இதரை வாழைப்பழம் 130 ரூபாய்க்கும் தற்போது விற்பனை செய்யப்படுகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் கதலி உள்ளிட்ட வாழைப்பழங்களுக்கான கேள்வி அதிகரித்து இருக்கின்ற நிலையில், சந்தைக்கு அதிகளவு கதலி உள்ளிட்ட வாழைப்பழங்கள் கொண்டு வரப்படுவதால், இந்த விலை சரிவு ஏற்பட்டுள்ளது.

கொரோனா அனர்த்தம், உரப் பிரச்சினை உள்ளிட்ட காரணங்களால் வாழைப்பழ உற்பத்தியில் ஏற்பட்ட சரிவு, கடந்த காலத்தில் விலை அதிகரிப்புக்கு காரணமாக இருந்தது.

# 400 வேலி கதியால்களுடன் இருவர் கைது

சட்டவிரோதமான முறையில் காட்டுக்குள் நுழைந்து, அங்கு வேலி அடைப்பதற்காக 400 கதியால்களை வெட்டி, ஏற்றுவதற்குத் தயாராக்கிக்கொண்டிருந்த வேளையில், இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், 400 வேலி கதியால்களும் கைப்பற்றப்பட்ட சம்பவம் மன்னாரில் இடம்பெற்றுள்ளது.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து, அடம்பன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பரப்பக்கண்டால் காட்டில், நேற்று முன்தினம் (18) மாலை மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே, இவ்விருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரும், அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 20 மற்றும் 22 வயது இளைஞர்கள் எனத் தெரிவித்த பொலிஸார், கதியால்களை ஏற்றுவதற்காக கொண்டுவரப்பட்ட லொறியும் கைப்பற்றப்பட்டுள்ளது என்றனர்.

விமானம் மூலம் சென்று

# இந்தியாவில் அகதிக் கோரிக்கை

■ வி.நிதர்ஷன்



இலங்கையில் இருந்து கடந்த ஜனவரி மாதம் இந்திய நுழைவு விசா பெற்று விமானம் மூலம் பயணித்த 06 பேர், நேற்று முன்தினம் (18) அகதிக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இலங்கையில தற்போது நிலவும் கடும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி நிலைமை உடன் தீரும் சாத்தியக் கூறுகள் இல்லை என்பதன் அடிப்படையில் தம்மை அகதிகளாக ஏற்றுக்கொள்ளுமாறு, இந்தக் கோரிக்கையை அவர்கள் சமர்ப்பித்துள்ளனர்.

இலங்கையின் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு இந்தியாவில் அகதிக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முஸ்லிம் தலைமைகள் அடிபணியாமல்

# சுயாதீனமாக தீர்மானிக்கவும்

## கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி கோரிக்கை

■ அஸ்லம் எஸ்.மௌலானா

தேசிய அரசியல் விவகாரங்களில் எவரது அழுத்தங்களுக்கும் அடிபணியாமல், நாட்டினதும் சமூகத்தினதும் நலன் கருதி, சுயாதீனமாகச் சிந்தித்து தீர்மானங்களை மேற்கொள்ள முஸ்லிம் அரசியல் தலைமைகள் முன்வர வேண்டும் என கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் முன்னணியின் செயலாளர் செயிட் ஆஷிப், நேற்று (19) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

நாடு எதிர்நோக்கியுள்ள பாரிய பொருளாதார நெருக்கடியானது, அரசியல் நெருக்கடியாக மாறியுள்ள இந்த இக்கட்டான சூழ்நிலையில், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மிகவும் நிதானமாகவும் பொறுப்புணர்வுடன் நேர்மையாக சிந்தித்து முடிவுகளை எடுக்க வேண்டும் என முஸ்லிம் சமூகம் எதிர்பார்க்கின்றது.

இருந்தபோதிலும் நடப்புகளை பார்க்கின்றபோது, அவ்வாறான நிலைமை காணப்படவில்லை. குறிப்பாக, ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்ற பின்னர், அவருக்கு ஆதரவு வழங்குவதா, இல்லையா என்கிற விடயத்தில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற 03 முஸ்லிம் கட்சிகளும் தாம் அங்கம் வகிக்கின்ற கூட்டணிக் கட்சிகளின் நிலைப்பாடுகளையே தமது தீர்மானங்களாக அறிவித்திருக்கின்றன.

முன்னதாக ஐக்கிய மக்கள் சக்தி, பிரதமர் ரணிலை ஆதரிப்பதில்லை என்ற நிலைப்பாட்டை எடுத்திருந்தது. அதனை அடியொற்றியதாகவே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பனவும் ரணிலை ஆதரிப்பதில்லை என்ற தீர்மானங்களை மேற்கொண்டுள்ளன.

இந்த விடயத்தில் கூட இவ்விரு கட்சிகளினதும் தலைமைகள், தமது கட்சிகளின் உயர் பீடத்தை கூட்டாமல் தன்னிச்சையாகவே ஊடகங்கள் வாயிலாக முடிவை அறிவித்துள்ளன.

அவ்வாறே தேசிய காங்கிரஸ் தலைமை, தனது கட்சி அங்கம் வகிக்கின்ற 10 கட்சிகளின் சார்பில் மைத்திரி தலைமையிலான சுதந்திரக் கட்சியும் உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ச ஆகியோரை தலைமைத்துவமாக கொண்ட சுயாதீன அணியும் ரணிலை ஆதரிப்பதாக தீர்மானங்களை அறிவித்த பின்னர் தாமும் ரணிலை ஆதரிப்பதாக தெரிவித்துள்ளது.

ஆனால், இம்முடிவை தேசிய காங்கிரஸ் உயர் பீடம் கூடித் தீர்மானித்ததாக அக்கட்சியின் தலைமை ஊடகங்களுக்கு செய்தி வெளியிட்டுள்ளமை கேலிக்குரியது. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

டெங்கு அபாயம்:

# 37 பேருக்கு சிவப்பு அறிவித்தல்

■ எம்.எஸ்.எம். ஹனீபா

பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு நுளம்பு பரவக் கூடிய வகையில் இடங்களை அசுத்தமாக வைத்திருந்த 37 பேருக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக, பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் ஏ.யூ. அப்துல் சமட், நேற்று (19) தெரிவித்தார்.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தையொட்டி பொத்துவில் பிரதேசத்தில் பொது சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார் மற்றும் விசேட டெங்கொழிப்பு செயலணியினர் இணைந்து வீடு வீடாகச் சென்று டெங்கொழிப்பு நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.



# அத்தியாவசிய சேவை: யாழில் கலந்துரையாடல்

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமை மற்றும் அத்தியாவசிய பொருட்கள், சேவைகள் மற்றும் விநியோகம் தொடர்பான கலந்துரையாடல், யாழ். மாவட்டச் செயலாளர் க.மகேசன் தலைமையில், மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் (18) நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் எரிபொருள் விநியோகம், மருந்து பொருட்களின் தேவைப்பாடு, சுகாதாரத் தேவைகள் , போக்குவரத்து சேவை, விவசாயிகள், மீனவர்களுக்கான எரிபொருள் தேவை, அம்பியூலன்ஸ் சேவை, மின்சார பயன்பாடு, மாவட்டத்தின் உணவு தேவைப்பாடு, விலைகள், காஸ் விநியோகம் போன்ற நடைமுறை விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி), வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், பணிப்பாளர் (யாழ். போதனா வைத்தியசாலை), பிரதேச செயலாளர்கள், துறைசார் திணைக்கள தலைவர்கள், பிரதிநிதிகள், மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், இராணுவ பிரதிநிதிகள், பொலிஸ் திணைக்கள பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்துகொண்டிருந்தனர்.



வற்றாப்பளை கண்ணகை

# அம்மன் கோவில் வருடாந்த பொங்கல்

## ஜூன் 13 அன்று

■ சண்முகம் தவசீலன்

வரலாற்றுச் சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் உற்சவம் தொடர்பிலான விசேட முன்னாயத்த கலந்துரையாடல், முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில், மாவட்ட செயலாளர் க.விமலநாதன் தலைமையில் நேற்று (19) நடைபெற்றது.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் நிகழ்வுகள், எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகி ஜூன் 06ஆம் திகதி தீர்த்தம் எடுத்தல் நிகழ்வும் ஜூன் 12ஆம் திகதி காட்டு விநாயகர் கோவில் பொங்கல் நிகழ்வும் ஜூன் 13ஆம் திகதி வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவிலின் நிகழ்வும் நடைபெறவுள்ளன.

இந்தப் பொங்கல் நிகழ்வு தொடர்பான முன்னேற்பாடுகள் தொடர்பிலான விசேட கலந்துரையாடல், கோவில் உற்சவத்துடன் சம்பந்தப்பட்ட துறை சார்ந்தவர்களுக்கும் மாவட்ட செயலாளர் மற்றும் கோவில் நிர்வாகத்தினர் ஆகியோருக்கும் இடையில் நடைபெற்றது.

திருவிழாவின் போது கோவிலுக்கு வருகின்ற வீதிகள், குடிநீர், மலசலகூட வசதிகள், பாதுகாப்பு, மின்சார வசதிகள் என அனைத்து விடயங்கள் தொடர்பிலும் அனைத்துத்துறை சார்ந்த அதிகாரிகளுடனும் இந்தக் கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இவ்வாறு ஒவ்வொரு துறை சார்ந்த விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடல் இடம்பெற்ற நிலையில், கோவில் உற்சவத்துக்கு ஏற்பாடுகளை அனைத்து தரப்பினரும் செய்வதாக உறுதியளித்துள்ளனர்.

மேலும், இந்த முன்னேற்பாடுகள் தொடர்பில் மீள்பரிசீலனை செய்வதற்கான கலந்துரையாடல், ஜூன் 3ஆம் திகதி காலை 10.30 மணிக்கு வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவிலில் இடம்பெறும் எனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.



## மதில் சரிந்ததில்

# குடியிருப்புகள் நான்கு சேதம்

எஸ்.கணேசன், கேதீஸ், துவாரகஷன்

தலவாக்கலை, ஹேமச்சந்திரா மாவத்தை பகுதியில் 50 அடி உயரத்திலுள்ள மதில் நேற்று (19) காலை 6.30 மணியளவில், சரிந்து விழுந்ததில் நான்கு குடியிருப்புகள் சேதமாகியுள்ளன.

இதன்போது 53 வயதுடைய பெண் ஒருவருக்கு கைகளில் காயங்கள் ஏற்பட்டுள்ளதோடு, அவர் உடனடியாக தலவாக்கலை தோட்டத்தில் இயங்கும் வைத்திய நிலையத்தில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார். கர்ப்பிணியொருவர் எவ்வித ஆபத்துகள் இன்றி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார்.

அத்தோடு, வீடுகளில் சுவர்கள் இடிந்து விழுந்துள்ளதோடு, வீடுகளில் இருந்த பெறுமதிமிக்க பொருட்களும் மண் மேட்டில் புதைந்துள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.





தொடர்ந்து இப்பகுதியில் மழை பெய்து வருவதால் அப்பகுதியில் மண் சரிந்து விழுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. மேலும், பாதிக்கப்பட்ட நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 25 பேர் உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு நுவரெலியா பிரதேச செயலகம், தலவாக்கலை பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

## வெற்றுச் சிலிண்டர்களால்

# மாணவர்களுக்கு அசௌகரியம்



ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் நகரிலுள்ள சமையல் எரிவாயு விற்பனை முகவர் நிலையங்கள் முன்பாக, பல நாள்களாக நீண்ட வரிசைகளில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள சமையல் எரிவாயு வெற்றுச் சிலிண்டர்களால் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பாதசாரிகள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

ஹட்டன் நகரில் நேற்று முன்தினம் (18) சமையல் எரிவாயு விநியோகிக்கப்படும் என லிட்ரோ நிறுவனத்தால் அறிவிக்கப்பட்ட நிலையில், ஹட்டன் நகரிலுள்ள ஹோட்டல்களின் உரிமையாளர்கள், சமையல் எரிவாயு சிலிண்டர்களை நடைபாதையில் நீண்ட தூரத்துக்கு வைத்து, ஒன்றுடன் ஒன்றை கயிற்றால் பிணைத்துக் கட்டி வைத்துள்ளனர்.

இதனால் நடைபாதையில் பயணிப்பவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹட்டன் நகரிலுள்ள சகல எரிவாயு விற்பனை நிலையங்களுக்கு முன்பாகவும் ஹோட்டல் மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் தரகர்களைப் பயன்படுத்தி, சமையல் எரிவாயுவை சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதால் சாதாரண பொதுமக்கள் சமையல் எரிவாயுவை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.



# ஆர்ப்பாட்டம்



பதுளை தபால் அலுவலகத்துக்கு முன்பாக அரச ஊழியர்கள், ஜனாதிபதிக்கு எதிராக நேற்று (19) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(படங்கள்: நடராஜா மலர்வேந்தன்)

## பஸ் தரிப்பிடத்தில் வெள்ளம்;

# பயணிகள் பாதிப்பு



காமினி பண்டார

ஹட்டன் நகரின் பிரதான பஸ் தரிப்பிடத்தில் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் பயணிகளும் பஸ் சாரதிகளும் பெரிதும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

குறித்த பஸ் நிலையத்தில் ஒரு புறம் இ.போ.ச பஸ்களும் மறுபுறத்தில் தனியார் பஸ்களும் தரித்து நிற்பதுடன், குறுகிய மற்றும் தூர இடங்களுக்கான பஸ் சேவைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

பஸ் தரிப்பிடத்தின் பல இடங்களில் மழை நீர் தேங்கி நிற்பதால் பயணிகள் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனை சீர்செய்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பயணிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## புத்தர் சிலை உடைப்பு விவகாரம்:

# சந்தேக நபர்களின் விளக்கமறியல் நீடிப்பு



என்.ஆராச்சி

2018ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் மாவனெல்ல நகரம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளிலுள்ள புத்தர் சிலைகளை உடைத்து சேதபடுத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 16 சந்தேகநபர்களுள் 13 பேரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் 13பேரும், கேகாலையில் அமைந்துள்ள சப்ரகமுவ மாகாண மேல் நீதிமன்றில் நேற்று முன்தினம் (18) ஆஜர்படுத்தப்பட்டனர்.

ஜகத் ஏ. கஹந்தமகே, ஜயகித அல்விஸ், எஸ்.ஐ. காலிங்க ஆகிய மூன்று நீதிபதிகளைக் கொண்ட நீதிபதிகள் குழாம் முன்னிலையில் அவர்கள் ஆஜர்படுத்தப்பட்டனர்.

> **பூசா சிறையில் வைக்கப்பட்டிருக்கும் 3 சந்தேகநபர்களை, எரிபொருள் பிரச்சினை காரணமாக ஆஜர்படுத்த முடியவில்லை**

இதன்போது, பூசா சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மேலும் 3 சந்தேகநபர்களை, எரிபொருள் பிரச்சினை காரணமாக ஆஜர்படுத்த முடியவில்லை என சிறைச்சாலை அதிகாரிகள் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இதன்போது, சந்தேக நபர்களுக்கு தண்டனையளித்து, இந்த வழக்கை விரைவாக நிறைவு செய்யுமாறு சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றில் கோரிக்கை வைத்த நிலையில், வழக்கை ஜூன் மாதம் 17ஆம் திகதி விசாரணைக்கு எடுக்குமாறு, நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

## மரம் விழ்ந்ததால்

# மோட்டார் சைக்கிள் நசுங்கியது



காஞ்சன குமார

தம்புள்ளை நகரத்தில் இருந்த பாரிய மரமொன்று நேற்று (19) காலை முறிந்து விழுந்ததில், வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று, நசுங்கி சேதமடைந்துள்ளது.

கண்டி- யாழ்ப்பாணம் ஏ9 வீதியில் தம்புளை வைத்தியசாலைக்கு முன்பாக இருந்த மரமே இவ்வாறு முறிந்து விழுந்துள்ளதாகவும் இதனால் மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோவொன்று பலத்த சேதமடைந்துள்ளதாகவும் தம்புள்ளை பொலிஸார் தெரிவித்தனர்.

நகரை அழகுப்படுத்துவதற்காக, சில வருடங்களுக்கு முன்னர் வீதியின் இரு மருங்கிலும் தம்புள்ளை நகர சபையால் மரங்கள் நடப்பட்டதுடன், மரத்தின் வேர்களால் நடைபாதைகளில் உள்ள கொன்கிறீட்கள் வெடித்து, பாதசாரிகள் அசௌகரியத்தை எதிர்நோக்கினர்.

> **தம்புள்ளை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளியை பார்வையிட வந்த இளைஞரின் மோட்டார் சைக்கிள் சேதமடைந்துள்ளது**

இந்த நிலையில், தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளி ஒருவரை பார்வையிடுவதற்காக வந்த இளைஞர் ஒருவரின் மோட்டார் சைக்கிளே இவ்வாறு சேதமடைந்துள்ளது.

# மரக்கறிகளின் விலை மீண்டும் அதிகரிப்பு

ரஞ்சித் ராஜபக்ஷ

மலையக நகரங்களில் மரக்கறிகளின் விலைகள் பல மடங்குகளாக அதிகரித்துள்ளன.

கேள்விகளுக்கு ஏற்ப உற்பத்தியாளர்களால் மரக்கறிகளை விநியோகிக்க முடியாமையே மரக்கறி விலை அதிகரிப்புக்கு காரணம் என மரக்கறி விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கமைய, ஹட்டன் நகரில் தக்காளி ஒரு கிலோ கிராம் 800 ரூபாய்க்கும் கரட் 400 ரூபாய்க்கும் கறிமிளகாய் 400 ரூபாய்க்கும் கத்தரிக்காய் 450 ரூபாய்க்கும் உருளைக்கிழங்கு 300 ரூபாய்க்கும் பச்சை மிளகாய் 600 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.



அத்துடன், தாழ்நிலப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகளின் விலையும் அதிகரித்துள்ளன.

மரக்கறி உற்பத்திக்கு தேவையான உரம் கிடைக்காமை, களை கொல்லிகளுக்கு பற்றாக்குறை உள்ளிட்ட காரணங்களால் மரக்கறி உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை பொருளாதார மத்திய நிலைய ஒன்றியத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

## அடாவத்தையில்

# பெண்கள் நால்வருக்கு குளவிக் கொட்டு

எம். செல்வராஜா

லுணுகலை, அடாவத்தை தோட்டத்தில் பெண் தொழிலாளர்கள் நால்வர், குளவி கொட்டுக்கு இலக்காகி, லுணுகலை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



நேற்று (19) இடம்பெற்றுள்ள இந்தச் சம்பவத்தில், பலர் குளவி கொட்டுக்கு இலக்கான போதிலும், பெண் தொழிலாளர்கள் நால்வரே, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிலர், சிகிச்சைகளின் பின்னர், வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

## கண்டி மாநகர சபையில்

# சு.க புதிய உறுப்பினர்

இக்பால் அலி

கண்டி மாநகர சபையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் நிலவிய வெற்றிடத்துக்கு புதிய உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன்படி, கண்டி மாநகர சபையில் சு.கவின் புதிய உறுப்பினராக கிங்கிலிஸ்லி பிரசன்ன, கண்டி மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக தலைமையில், பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

> **கண்டி மாநகர சபையில் சு.கவின் புதிய உறுப்பினராக கிங்கிலிஸ்லி பிரசன்ன பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்**

இந்நிகழ்வில், கண்டி மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சப்பரகமுவ மாகாண சபை ஆளுநர், கண்டி மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் சிவபாலன், ஐ. ஐனூடீன், வஹாப் மாஸ்டர் உள்ளிட்ட கட்சியின் மாவட்ட, தொகுதி அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தடை தாண்டும் நற்பிரஜைகளுக்கு இடையூறு விளைவித்து விடாதீர்

நாட்டின் நிலைமையை ஆழமாய் அவதானித்தால், ஒரு தடையைத் தாண்டிச் செல்கையில், மற்றுமொரு தடைக்குள் சிக்கிக்கொள்ள வேண்டிய கட்டாயமே சகலருக்கும் ஏற்பட்டுள்ளது. ஒவ்வொன்றுக்காக வரிசையில் காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது.

“பொருளாதார ரீதியில் பாதாளத்தில் விழுந்துகிடக்கும் நாட்டை, தூக்கி நிமிர்த்துவேன்” என கங்கணம் கட்டிய புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அத்தியாவசியமற்ற அரச பணியாளர்களுக்கு இன்று (20) விடுமுறை கொடுத்துள்ளார். வீட்டுத் தோட்டங்களிலும் பயன்படுத்தாத அரச காணிகளிலும் விவசாயம் செய்வதை ஊக்குவித்துள்ளார்.

வரிசைகளை முழுமையாக இல்லாமல் செய்யமுடியாது. எனினும், ஓரளவுக்கு குறைத்துக்கொள்ள முடியுமெனவும் ஜூன் மாதம் நடுப்பகுதியில் உணவுப் பஞ்சம் ஏற்படும்; அதுவரையிலும் ஓரளவுக்கு சமாளித்துக்கொண்டு போகலாமென்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

சமாளித்துச் செல்வது, நிலைமையை இன்னும் மோசமாக்கிவிடும். ஒவ்வொரு நாளும் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன. சமையல் எரிவாயு, எரிபொருட்கள் இன்மையால், ஹோட்டல்கள் உள்ளிட்ட பல வர்த்தக நிலையங்கள் இழுத்து மூடப்பட்டுள்ளன.

இந்த நிலைமை நீடிக்குமாயின் கொழும்பு உள்ளிட்ட பெருநகரங்களில் வாழ்வோர், இன்னும் இரண்டொரு நாள்களில் முழுமையாக வீதிக்கு இறங்கிவிடுவர் எனத் தெரிவித்துள்ள முஜிபுர் ரஹ்மான் எம்.பி, மண்ணெண்ணெய், காஸ் ஆகியவற்றையேனும் முறையாக விநியோகிப்பதற்கு வழிசமைக்குமாறு கோரிநின்றார். ஆக, ஒவ்வொரு தடைகளையும் தாண்டித்தான், வாழ்க்கையை முன்னோக்கி நகர்த்த வேண்டியுள்ளது.

நமது நாட்டின் பரீட்சை முறைமையின் பிரகாரம், பாடசாலை மாணவர் பருவத்தில், மூன்று தடைகளைத் தாண்டுவதற்கான பரீட்சைகள் நடத்தப்படும். ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, சாதாரண தர பரீட்சை, உயர்தர பரீட்சை என்பனவாகும்.

எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகும் சாதாரண தரப்பரீட்சை, இரண்டாவது தடை தாண்டலாகும். அக்காலப்பகுதியிலேனும், நேரத்துக்குச் சென்று, நேரகாலத்துடன் வீடுகளுக்குத் திரும்புவதற்குத் தேவையான போக்குவரத்து ஏற்பாடுகளை செய்துகொடுக்க வேண்டும்.

பரீட்சைக்கான பாடங்களை மீட்டுப் பார்க்க வேண்டிய இறுதி மூன்று மாதங்கள் மின்வெட்டால், கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. போராட்டம், ஆர்ப்பாட்டம், பேரணிகளால், பாடசாலை கல்வி நடவடிக்கைகளும் பிரத்தியேக வகுப்புகளும் சீர்குலைந்திருந்தன. இவ்வாறான நெருக்குவாரங்களுக்கு முகங்கொடுத்தே, பலரும் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் இடைவேளையில் சிற்றுண்டி கூட உண்ணமுடியாத அளவுக்கு கோதுமை மாவின் விலை அதிகரிப்புக்குப் பின்னர், பேக்கரி தின்பண்டங்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. இவையெல்லாம் மனதளவில் கடுமையான தாக்கத்தை செலுத்தும்.

பாடசாலை மாணவர் பருவத்தில், சா/த பரீட்சைத் தடையை தாண்டுவது மிகமுக்கியம். அதன்பின்னரான தடைகளைத் தாண்டுவது அவ்வளவுக்கு கடினமானதாக இருக்காது என்பதை நினைவூட்டுவதுடன் நாட்டின் எதிர்கால நற்பிரஜைகளுக்கு இக்காலத்திலேனும் இடையூறுகளை ஏற்படுத்திவிடாது. தீர்க்கமான தீர்மானங்களை எடுக்கவேண்டுமென வலியுறுத்துகின்றோம்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

இரவையும் பகலையும் வெவ்வேறாகப் பார்க்கின்றோம். ஆனால், எல்லாப் பொழுதுகளிலும் உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. கருமங்கள் இல்லாத பொழுதுகள் இல்லை.

பகலில் சூரிய ஒளி இருப்பதால், எமக்கு எல்லாம் தெளிவாகத் தெரிகின்றது. காட்சிகளில் தெளிவு; இயக்கங்களில் வேகம்; நிலங்களில் விவசாயம்; கல்விக் கூடங்களில் கற்பித்தல் நடவடிக்கைகள், மக்களின் நடமாட்டங்கள், வழிபாட்டுத் தலங்களில் வழிபாடுகள், மைதானங்களில் விளையாட்டுகள், தொழில் ரீதியான நடவடிக்கைள் எனப் பலவுண்டு.

எனினும், இரவுப் பொழுதிலும் பல செயல்கள் நடந்தவண்ணமே இருக்கின்றன. இரவில் தொழிற்சாலை இயங்குவது புதிதல்ல; பயணங்கள் தொடர்கின்றன. இரவு விடுதிகள், உல்லாச கேளிக்கைகள், மின்குமிழ்களின் அழகிய வெளிச்சங்கள், இணையக் கல்வி, உலக நிறுவனங்களுடனான தொடர்புகள் எனப் பலவுண்டு.

எல்லாவற்றிலும் மேலாக, உலக மக்களின் ஜனனம், இரவில்த்தான் அதிகமாக நடைபெறுகின்றன. எமது நாட்டில் சூரிய ஒளி என்றால், மேற்கத்தைய நாடுகள் உட்பட, பலநாடுகளில் இரவாக மிளிரும்; துலங்கும். காலங்கள் வீணடிக்கப்படுவதில்லை. இரவும் பகலும் உழைப்பவர்கள் பலகோடி. காலங்களைக் கரைக்கலாகாது. நேர வித்தியாசம் என எதுவும் இல்லை. என்றும் விழித்தபடியே எம்மை நாம் சிருஷ்டிக்க வேண்டியுள்ளது. ஓய்வு எப்போது?

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### பலாங்கொடை வீதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை

பலாங்கொடை நகர வீதிகள் உட்பட நகரத்தை அண்டிய கிராமப்புற பாதைகள் போன்றவற்றில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை, பெருமளவில் காணப்படுவதாக பொதுமக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

பலாங்கொடை நகர வீதிகள், இராசகலை, பின்னவல, கலகம, கல்தொட்ட, ஒலுகன்தொட்ட போன்ற நகரங்களிலும், இந்நகரங்களில் இருந்து தோட்டங்களுக்குச் செல்லும் வீதிகளிலும் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் நாய்கள், பாடசாலை செல்லும் மாணவர்கள் உட்பட வீதியால் பயணிப்போரை தொல்லைகளுக்கு உட்படுத்துவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில், மருந்துகளுக்கான தட்டுப்பாடு பெருமளவில் இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக, விசர்நாய் கடிக்கான மருந்துகள் எங்கும் இல்லை என்று மருத்துவ வட்டாரங்கள் அறிவித்துள்ளன. இந்நிலையில், இவ்வாறு கட்டாக்காலி நாய்களின் பெருக்கம், வீதியில் செல்வோருக்கு அச்சுறுத்தலாக காணப்படுகின்றது.

அத்துடன், வீதிகளில் கூட்டமாகத் திரியும் இந்தக் கட்டாக்காலி நாய்களால் விபத்துகளும் இடம்பெற்றுள்ளன. எனவே, மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்புவாய்ந்த உள்ளூராட்சி நிர்வாகம், இதற்கு உடனடித் தீர்வு காண வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

என். பிரேம்குமார்

# இலங்கையின் தலைவிதி யார் கையில்?



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

வெல்லப்போவது போராட்டகாரர்களா, அரசியல்வாதிகளா என்பதே, இன்று எம்முன்னால் உள்ள கேள்வியாகும். இந்தக் கேள்விக்கான பதில், இலங்கையின் எதிர்காலத்தை தீர்மானிக்கும்.

அரசியல்வாதிகள், ரணிலைப் பிரதமர் ஆக்கி, தங்கள் ஆட்டத்தின் முதலாவது காயை நகர்த்தி உள்ளார்கள். ‘கோட்டா கோ கம’வின் திசைவழிகளே, இலங்கையின் ஜனநாயகத்தின் உரிமைகளின் பாதையையும் சாத்தியக்கூறுகளையும் தீர்மானிக்கவல்லன என்பதை போராட்டக்காரர்கள் மட்டுமன்றி, இலங்கையின் மீது அன்பு கொண்ட அனைவரும் மனங்கொள்ள வேண்டும்.

இலங்கையின் நெருக்கடி, வெறுமனே ஒரு பொருளாதார நெருக்கடியல்ல! இது அரசியல், பொருளாதாரம், சமூகம், ஆட்சி-நிர்வாகம் ஆகியவற்றைக் கொண்டதொரு நாற்பரிமாண நெருக்கடி ஆகும். இதை அண்மைய நிகழ்வுகள் மீண்டும் உறுதிப்படுத்தி உள்ளன.

இலங்கையின் நெருக்கடியை வெறுமனே பொருளாதார நெருக்கடியாக நோக்கினால், இந்நெருக்கடியில் இருந்து என்றென்றைக்கும் மீளவியலாது. எந்தவோர் ஒற்றைப் பரிமாணத்திலும் தனித்து நோக்கவியலாதபடி, இந்நான்கும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. இதை உணர்ந்துகொள்வது முக்கியமானது. இது தனிநபர்கள் பற்றியதல்ல. இது, நமது நாட்டின் அரசியல் கட்டமைப்பு, அரசியல் பண்பாடு ஆகியவற்றின் விளைவாக உருவாகியது. எனவே, இக்கட்டமைப்பையும் இதன் பண்பாட்டையும் மாற்றாமல், நின்று நிலைக்கக்கூடிய தீர்வு சாத்தியமல்ல.

ரணில் விக்கிரமசிங்க, பிரதமராகப் பதவியேற்றவுடன் பலர் மத்தியில் நம்பிக்கையும் உற்சாகமும் பிறந்தது. அது, இப்போது கொஞ்சம் குறைந்தாலும், பொருளாதாரத்தை சீர்செய்வார் என்று ஓர் ஓரமாக நம்பிக்கை இருப்பதாக, பலர் சொல்கிறார்கள்.

இந்த நம்பிக்கைகளின் அடிப்படை, ரணிலின் அயலுறவுத் தொடர்புகள் எனில், நமது நாடு இன்னும் கூறுபோடப்படுகிறது என்று பொருள். அவரது நிர்வாகத் திறமையெனில், நல்லாட்சியின் கொடுமைகளை நினைவுகூராமல் இருக்கவியலாது. பொருளாதார அறிவு எனில், 2015ஆம் ஆண்டு முதலான காலப்பகுதியில், இலங்கை பெரிதாக எதையும் சாதித்துவிடவில்லை. ஏனெனில், யுத்தம் முழுவீச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே, பொருளாதார வளர்ச்சியை ஆண்டுதோறும் அடைந்த நாடு இலங்கை.

ரணிலின் தாராண்மைவாத-ஜனநாயக முகத்தை முன்மொழிவோரும் மெச்சுவோரும், ‘படலந்த’ ஆணைக்குழு அறிக்கையை முழுமையாக வாசிப்பது நல்லது.

சந்திரிகா பண்டாரநாயக்கவால் அமைக்கப்பட்ட இவ்வாணைக்குழு, ரணிலை குற்றவாளியாகக் கண்டதோடு, அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும்படியும் அவரது குடியுரிமையைப் பறிக்கும்படியும் பரிந்துரை செய்தது. சந்திரிகா, இறுதிவரை இதுதொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

2015ஆம் ஆண்டு, ராஜபக்‌ஷ குடும்பத்தை வீட்டுக்கு அனுப்ப மக்கள் வாக்களித்தார்கள். அதைத் தொடர்ந்த மைத்திரி-ரணில் ஆட்சி ஒரு பேரிடர். இந்தப் பேரிடரே மீண்டும் ராஜபக்‌ஷ குடும்பத்தை ஆட்சிபீடத்துக்குக் கொண்டு வந்து சேர்ந்தது.

ரணிலின் ஆட்சிக்காலத்தில், ராஜபக்‌ஷர்கள் மீதான எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல், ரணில் பார்த்துக் கொண்டார். அதன் இன்னோர் இடைக்கால அத்தியாயமே, இப்போது அரங்கேறுகிறது. இந்த அரசியல் தரகர்களின் கைகளில் நாடு சிக்கி சின்னாபின்னமாகிறது.

ரணில் மக்களின் தெரிவல்ல; அவர் மேற்குலகின் தெரிவு என்பது வெளிப்படை. மக்களால் அங்கிகரிக்கப்படாத ஒருவர் மக்களின் நலன்களுக்காகக் கடமையாற்றப் போவதில்லை. தவறிச் சகதிக்குள் விழுந்த மிருகத்தை வேட்டையாடும் நரியின் செயலை, ‘இராஜதந்திரம்’ என்று போற்றிப் புகழப் பலர் இருக்கிறார்கள். இன்று நாடு மட்டுமல்ல, நாட்டு அரசியலும் வங்குரோத்து நிலையில் தான் உள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களின் அண்மைக்கால நடத்தைகள், பாராளுமன்றம் சாக்கடை என்பதை மீள உறுதிப்படுத்தியுள்ளன.

மக்கள் பிரதிநிதிகள் என்போர், மக்களின் மனோநிலையில் இருந்து வெகுதொலைவில் இருக்கிறார்கள். பாராளுமன்றம் வயதானவர்கள் பொழுதுபோக்குக்கும் பேச்சுத்துணைக்கும் சேரும் ஒரு கட்டடமாக மாறிவிட்டது. “நான் பொருளாதாரத்தை சீர்படுத்தவே வந்துள்ளேன்” என்ற வாக்குமூலத்தின் மூலம், தன்னிடம் வேறெதையும் எதிர்பாராதீர்கள் என்று ரணில் தீர்க்கமாகச் சொல்லியிருக்கிறார்.

எந்த அரசாங்கத்தை மக்கள் வீட்டுக்குப் போகச் சொன்னார்களோ, அதே அரசாங்கம் மஹிந்தவுக்கு பதிலாக, ரணில் என்ற முகமூடியைச் சூடியபடி, அதே ஆட்களுடன் வலம் வருகிறது. இது மக்கள் கோரிய மாற்றமல்ல.

மக்கள் பிரதிநிதிகளின் அண்மைய நடத்தைகள், அவர்களின் வங்குரோத்து நிலையை விளக்கப் போதுமானவை. முதலாவது, பிரதமரது அண்மைய உரை; அவர் வெளிப்படையாக உண்மையைச் சொல்லிவிட்டார் என்பதற்காக மெச்சப்பட்டது. மக்களால் தெரிவானவர் மக்களுக்கு உண்மையைச் சொல்வதுதானே நியாயம். அதுதான் மக்கள் பிரதிநிதிகளின் பணி. வெளிப்படையாக உண்மை சொன்னவரை மெச்சுகிற அளவுக்கே, இவர்கள் இருக்கிறார்கள் என்பதும், இவர்களின் பொய்களை அறிந்தும், தொடர்ந்தும் இவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பியுள்ளோம் என்பதும், அரசியல் வங்குரோத்து மட்டுமல்ல, அறஞ்சார்ந்த வறுமையுமாகும்.

இரண்டாவது, ரணில் பிரதமரானவுடன் அவர் நல்ல நிர்வாகி, இலங்கைக்கு அவரே தேவை என்று பலரும் எழுதியிருந்தார்கள். பிரதமராகத் தவறிழைத்தவரை, மத்திய வங்கி பிணைமுறி ஊழலில் நாட்டுக்குப் பலகோடி நட்டத்தை ஏற்படுத்தக் காரணமாக இருந்தவரை, நல்ல நிர்வாகி என்பது என்ன மாதிரியான மனநிலை? கெட்டிக்காரத்தனமாகத் திருடுபவனை ‘வல்லவன்’ என்று கொண்டாடுவதை என்னவென்பது?

மூன்றாவது, சர்வதேச நாணய நிதியத்திடம் எப்படியாவது கடன் வாங்கிவிட வேண்டும் என்று எல்லோரும் சொல்கிறார்கள். கடன் வாங்குவது தவறு என்றுதான் எமக்குக் கற்பிக்கப்பட்டிருக்கிறது. பிறகு, நாட்டைக் கடன்வாங்கி இன்னும் கடனாளியாக்கு என்று வாதிடுவது, எவ்வகைப்பட்ட அறம்?

‘கோட்டா கோ கம’ போராட்டமானது தொடரவேண்டியதன் அவசியத்தை மேற்சொன்ன விடயங்கள் காட்டி நிற்கின்றன. ரணில் வந்தால், அரசியல் ஸ்திரத்தன்மை இருக்கும் என்று பலரும் சொல்கிறார்கள். பானையில் எதுவும் இல்லாதபோது, அகப்பையில் கிள்ளுவதற்கு என்ன இருக்கிறது? ரணில், பொதுஜன பெரமுனவின் தயவில் இருக்கிறார். பொதுஜன பெரமுன, போராட்டக்காரர்களுக்கு எதிராக இருக்கிறது. இவ்வளவுதான்!

போராட்டக்காரர்களைக் கவனிக்க குழு அமைத்ததன் மூலம், இதன்மீதான தனது முழுமையான கவனத்தை ரணில் வைத்திருக்க விரும்புகிறார். ஒருபுறம், இப்போராட்டம் விரிவடையாமல் காலிமுகத் திடலுக்குள்ளேயே வைத்திருக்கவும் அதன் இயங்கியலைக் கண்காணிக்கவும் அவர் அரச வளங்களைப் பயன்படுத்துகிறார்.

மறுபுறம், இப்போராட்டத்தை ஜனாதிபதிக்கு ஓர் அழுத்தமாகப் பிரயோகிப்பதனூடு தனது இருப்பைத் தக்கவைக்க முனைகிறார். பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து, தங்கள் வழமையான அரசியலைத் தொடர்ந்தும் முன்னெடுக்க முனைகிறார்கள்.

இதற்கு மாற்றாக, புதிய அரசியல் பண்பாடு நோக்கி மக்களைப் பயணிக்க வைக்கும் காரியத்தில், இப்போராட்டக்காரர்கள் இறங்கியிருக்கிறார்கள். இது ஓர் எதிர்ப்பியக்கமாக வளர்ந்துள்ளது. இது மக்களிடம் ஜனநாயகத்தை மீண்டும் கொண்டு வருவதற்கான புதிய அரசியல் ஆற்றலையும் புதிய அரசியல் பண்பாடு, பொறுப்புக்கூறல், முடிவெடுப்பதில் குடிமக்களின் பங்கேற்பு, அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் வெளிப்படைத்தன்மை போன்றவற்றைக் கோரி நிற்கின்றது.

இந்தக் கோரிக்கைகள் இரண்டு விடயங்களைக் காட்டி நிற்கின்றன. முதலாவது, பாராளுமன்ற ஜனநாயகம் எவ்வாறு ஆதிக்க அரசியல் வர்க்கத்தின் அனைத்துத் தரப்பாலும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு சீரழிக்கப்பட்டுள்ளது என்பதை, மக்கள் தெளிவாக உணர்ந்துள்ளார்கள்.

இரண்டாவது, வெறும் வாக்காளராக இல்லாமல் பங்கேற்பாளராக அரசியலில் இணைந்திருப்பதற்கான புதிய ஜனநாயக விருப்பைக் கோடிடுகின்றன. இவை வரவேற்கத்தக்க மாற்றங்கள்.

இந்த மாற்றங்கள் இன்றைய அரசியல் வர்க்கத்தின் விருப்புகளுக்கு நேரெதிரானது. வாக்களிப்பதற்கு அப்பால் பார்வையாளர்களாகக் குடிமக்களை வைத்திருந்த விரும்புகிற ஓர் அரசியல் கட்டமைப்பு ஆட்டக் கண்டுள்ளது. இந்தக் கட்டமைப்பைத் தக்கவைக்க கட்சி பேதமின்றி அனைவரும் உழைக்கிறார்கள்.

ஏனெனில், இந்தக் கட்டமைப்பு தகர்வதன் ஆபத்துகளை அவர்கள் நன்கறிவார்கள். எனவே, இந்த எதிர்ப்பியக்கத்தை சிதைப்பதே அவர்களின் முக்கிய குறிக்கோளாக இருக்கிறது. அதற்கு ஜனநாயகத் தாராளவாத முகமூடியுடன் ஒருவர் வந்திருக்கிறார்.

இனிவரும் காலங்கள் இந்த எதிர்ப்பு இயக்கத்துக்கு நெருக்கடியான காலமாக இருக்கும். “இந்நெருக்கடியான காலத்தில், அரசாங்கம் செயற்படக் காலஅவகாசம் கொடுக்க வேண்டும்”, “அரசியல் ஸ்திரத்தன்மைக்கு போராட்டக்காரர்கள் உதவவேண்டும்” என்ற குரல்கள் கொஞ்சம் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

இவை அரசியல்வாதிகளினதும் அவர்தம் பிரதிநிதிகளின் குரல்களாகும். இப்போது பிரிகோடுகள் மிகத் தெளிவாகியுள்ளன. பாராளுமன்ற அரசியல்வாதிகள் ஒருபுறம், போராட்டக்காரர்கள் மறுபுறமுமாகக் களத்திலே நிற்கிறார்கள். இலங்கையின் தலைவிதி யார் கையில்?

# தேயிலை செய்கையாளர்களுக்கு கொமர்ஷல் வங்கி உதவி



பண்டாரவளை, தெனியாய பகுதிகளில் நான்கு தேயிலை கழகங்களைச் சேர்ந்த 532 தேயிலை செய்கையாளர்களுக்கு 'திரிசக்தி' அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கொமர்ஷல் வங்கி நிதி உதவிகளை வழங்கி உள்ளது.

கிராமிய பெறுமான சங்கிலித் தொடர் நிலைத்தன்மையை பேணும் வகையிலும் மற்றும் அதன் ஆற்றலை அதிகரிக்கும் வகையிலும் அண்மையில் அறிமுகம் செய்யப்பட்ட இத்திட்டம் நவீன தொழில்நுட்ப அபிவிருத்திகளில் கவனம் செலுத்துகின்றது. தேயிலை தொழில்துறையின் உற்பத்தி ஆற்றலை சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் அதிகரிப்பதற்கு இசைவாக இது முன்னெடுக்கப்படுகின்றது. அத்தோடு சிறிய அளவிலான செய்கையாளர்களை ஊக்குவிக்கும் வகையில் பண உதவியும் வழங்கப்படுகின்றது என வங்கி அறிவித்துள்ளது.

மேலும் வங்கியின் பண்டாரவளை மற்றும் தெனியாய கிளைகள் அவற்றின் விவசாய மற்றும் நுண் நிதிப்பரிவுகள் (AMFU) மற்றும் வங்கியின் அபிவிருத்திக் கடன் திணைக்களம் (DCD) என்பனவற்றின் துணையோடு இந்தப் பிராந்தியங்களில் உள்ள தெரிவு செய்யப்பட்ட தேயிலைக் கழகங்களுக்கு நான்கு புவி அகழ் இயந்திரங்களையும் அன்பளிப்பாக வழங்கி உள்ளன.

இவற்றைப் பெற்றுக் கொண்டவர்களில் தெனியாய PARCIC சேதன தேயிலைக் கழகமும் ஒன்றாகும். இந்தக் கழகத்தின் தேயிலை செய்கையாளர்கள் தமது கழகத்தால் உற்பத்தி செய்யப்படும் சேதனப் பசளையைப் பயன்படுத்தி செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் தொடராக மொறட்டுவையில் பேராசியர் பியசேன அபேகுணவர்தனவுக்கு சொந்தமான அஹின்ஸா தேயிலை தொழில்சாலைக்கு பசுமைத் தேயிலைகள் விநியோகிக்கப்படுகின்றன. இந்நிறுவனம் உள்ளூரில் சேதனப் பசளை மூலமான தேயிலை செய்கையில் முன்னோடி நிறுவனமாகும்.

வங்கியின் திரிஷக்தி பெறுமான சங்கிலி அபிவிருத்தித் திட்டம் இதற்கு முன்னர் மட்டக்களப்பு கொக்கடிச்சோலை பாரம்பரிய அரிசி உற்பத்தியாளர்களுக்கும், முல்லைத்தீவு கால்நடை வளர்ப்பு கூட்டுறவு கழகத்துக்கும், முள்ளியாவளையில் உள்ள விவசாயிகள் குழுக்கள் பலவுக்கும் இவ்வாறான உதவிகளை வழங்கி உள்ளது.

# DFCC வங்கியின் இணையத்தளத்துக்கு BestWeb.LK இல் உயர் விருது



DFCC வங்கியின் இணையத்தளத்துக்கு BestWeb.lk விருதுகள் வழங்கும் நிகழ்வில் 3 வெள்ளி விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தன. 2009 ஆம் ஆண்டு முதல் LK Domain Registry இனால் வருடாந்தம் இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. வங்கி மற்றும் நிதியியல் பிரிவில் சிறந்த வங்கி இணையத்தளம் என்பதற்கான தங்க விருது வழங்கப்படாத நிலையில், DFCC வங்கியின் இணையத்தளத்துக்கு வெள்ளி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் ஒட்டுமொத்த சிறந்த தமிழ் இணையத்தளம் மற்றும் சிறந்த சிங்கள இணையத்தளம் ஆகிய விருதுகளும் வழங்கப்பட்டிருந்தன.

எதிர்காலத்தில் சிறந்த வாடிக்கையாளர்களை மையப்படுத்திய மற்றும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட வங்கியாகத் திகழ்வது எனும் DFCC வங்கியின் நோக்கத்துக்கமைவாக, வாடிக்கையாளர் சேவை, வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் ஒப்பற்ற பயன்படுத்தல் இலகுத் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் வங்கியின் இணையத்தளம் இலங்கையின் சிறந்த இணையத்தளங்களில் ஒன்றாக வடிவமைக்கப்பட்டிருந்ததுடன், அதனூடாக சிறந்த பாவனையாளர் அனுபவத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக, துரிதமாக இயங்கக்கூடிய திறன் அம்சங்கள், சிறந்த வடிவமைப்பு மற்றும் கட்டமைப்புகள் போன்றன ஏற்படுத்தப்பட்டிருந்தன. இந்த தெளிவான மற்றும் எளிமையான கட்டமைப்புடன், இலகுவான மற்றும் ஓர் அழுத்தலில் பார்வையிடக்கூடிய தன்மை மற்றும் நிபுணத்துவ உணர்வு போன்றன DFCC வங்கியின் இணையத்தளத்தை அனைவர் மத்தியில் சிறந்த வகையில் தென்பட ஏதுவாக அமைந்துள்ளன. துல்லியமான, பிந்திய மற்றும் பொருத்தமான தகவல்களை ஒவ்வொரு பாவனையாளரின் தெரிவு மொழியிலும் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், வங்கியினால் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலுவும் இணையத்தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த விருதின் மூலமாக DFCC வங்கியின் இணையத்தளம் பரிபூரண, நவீன, பாவனையாளருக்கு நட்பான இணையத்தளமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், சாதாரண வங்கியியல் இணையத்தளம் ஒன்றினால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் தீர்வுகளுக்கு அப்பாலான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது. DFCC வங்கியின் நிலைபேறாண்மை கொள்கைக்கமைய பகுதியளவு மெய்நிகர் கிளையாக கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு, கடந்த ஒரு வருட காலமாக வங்கியின் இணையத்தளத்தை மேம்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட்டிருந்த முயற்சிகளுக்கு கிடைத்திருந்த அங்கிகாரமாகவும் இந்த விருதுகள் அமைந்துள்ளன. DFCC வங்கிக்கு 2020 ஆம் ஆண்டின் BestWeb.LK விருதுகள் வழங்கும் நிகழ்வின் போதும் கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது. மிகவும் புகழ்பெற்ற இணையத்தளம், சிறந்த தமிழ் இணையத்தளத்துக்கான வெண்கல விருது மற்றும் சிறந்த சிங்கள இணையத்தளத்துக்கான மெரிட் விருது வழங்கப்பட்டிருந்ததுடன், 2021 ஆம் ஆண்டில் சிறந்த வங்கி இணையத்தள விருதும் வழங்கப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டுக்குரிய BestWeb.LK விருதுகள் வழங்கலுக்கும் விண்ணப்பிப்பதற்கு வங்கி எதிர்பார்த்துள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளல் விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த விருதுகளைப் பெற்றுக் கொண்டமை மற்றும் இணையத்தள வடிவமைப்பு தொடர்பில் DFCC வங்கியின் டிஜிட்டல் தந்திரோபாயத்துக்கான உப தலைவர் தினேஷ் ஜெபமணி கருத்துத் தெரிவிக்கையில், "2021 ஆம் ஆண்டின் BestWeb.LK விருதுகள் வழங்கும் நிகழ்வில் நாம் கௌரவிக்கப்பட்டுள்ளதையிட்டு நாம் மிகவும் பெருமை கொள்கின்றோம். எமது பெருமளவான வாடிக்கையாளர்கள் மற்றும் பொது மக்கள் பலருக்கும் முதல் தொடர்பை ஏற்படுத்தும் பகுதியாக எமது இணையத்தளம் அமைந்துள்ளது. எம்மைப் பற்றியும், நாம் வழங்கும் சேவைகள் மற்றும் தீர்வுகள் பற்றியும் அறிந்து கொள்ள உதவியாக அமைந்துள்ளது. இதை புரிந்து கொண்டு, மொபைலில் பார்வையிடக்கூடிய வகையில் சகல தலைமுறைகளைச் சேர்ந்தவர்களும் இலகுவாக பார்வையிடக்கூடிய வகையில் நாம் எமது இணையத்தளத்தை வடிவமைத்திருந்தோம். பார்வைக் குறைபாடுகளைக் கொண்ட பாவனையாளர்கள் போன்ற விசேட தேவை கொண்டவர்களையும் கவனத்தில் கொண்டு, W3C Web Content அணுகல் வழிகாட்டல்களைப் பின்பற்றி நாம் இணையத்தளத்தை வடிவமைத்திருந்தோம். எமது இணையத்தளம் மூன்று மொழிகளிலும் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், அனைத்து இலங்கையர்களாலும் பார்வையிடக்கூடிய வகையில் அமைந்துள்ளது. மேலும் நாம் Google's core web vital update ஐயும் 2021 இல் நாம் திரட்டியுள்ளோம்" என்றார்.

மும்பை

"ஒரு பெண்ணை தாக்கத் துணியும்

# ஆணின் கையை உடைப்பேன்"



பெண் தொண்டர் மீது தாக்குதல் நடத்தியதை அடுத்து, மராட்டிய மாநிலம் புனே மாவட்டத்துக்கு வந்திருந்த தேசியவாத காங்கிரஸ் தலைவர் சுப்ரியா சுலே "மராட்டியத்தில் ஒரு பெண்ணை தாக்கத் துணியும் ஆணின் கையை உடைப்பேன்" என ஆக்ரோஷமாக கூறியுள்ளார்.

அங்கு நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர்,

தேசியவாத காங்கிரஸ் கட்சியை சேர்ந்த பெண் தொண்டர் உட்பட 4 பேர், சமையல் எரிவாயு விலை உயர்வு குறித்து மனு கொடுக்க சென்றதாக தெரிகிறது. இது அங்கு கூடியிருந்த பாரதிய ஜனதா கட்சித் தொண்டர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

அப்போது சிலர் அந்தப் பெண்ணை தாக்கினர். இது தொடர்பாக பா.ஜ.கவினர் மூவர் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்தனர்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஆண்ணொருவர், பெண்ணொருவரை தாக்குவது மராட்டிய கலாசாரத்துடன் எந்த வகையிலும் ஒத்துபோகாது. இது சாகு மகாராஜ், மகாத்மா புலே, பாபாசாகேப் அம்பேத்கர், சத்ரபதி சிவாஜி மகாராஜின் மராட்டியமாகும். அவர்கள் எப்போதும் பெண்களை மதித்தார்கள்.

நான் சொல்கிறேன். இனிமேல் மாநிலத்தில் ஒரு பெண்ணை அடிக்க யாரேனும் கை ஓங்கினால், நானே அங்கு நேரில் சென்று அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வேன். அதுமட்டுமன்றி அவரது கையை உடைத்து அவரிடமே ஒப்படைப்பேன் என்றார்.

சென்னை

# தமிழகத்தில் 2026 பா.ஜ.க ஆட்சி



"தமிழகத்தில் 2026 சட்டசபை தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) ஆட்சி அமைப்பதை யாராலும் தடுக்க முடியாது" என தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

எழுத்தாளர் சுப்பு எழுதியுள்ள 'திராவிட மாயை' ஆங்கில நூல் வெளியீட்டு விழா சென்னை, மயிலாப்பூரில் நடந்தது. அதில் நூலை அண்ணாமலை வெளியிட 'வின்' தொலைக்காட்சி தலைவர் தேவநாதன் யாதவ் பெற்றார்.

அங்கு அண்ணாமலை தொடர்ந்து உரையாற்றுகையில், திராவிடம் என்பது உடைந்து விட்டது. திராவிடம் என்று 70 ஆண்டுகளாகக் கூறி வரும் பொய்யை உடைத்து வருபவர்கள் பலர் உண்டு. குழப்பங்கள் நிறைந்தாக திராவிட கொள்கை உள்ளது. தமிழகத்தில் 2019 ஆல் தீண்டாமை அதிகம் உள்ள கிராமங்களின் எண்ணிக்கை 626 ஆகவும் 2022இல் 400க்கும் மேற்பட்ட கிராமங்களும் இருப்பதாகவும் புள்ளிவிவரங்கள் வெளியாகின. தமிழகத்தில் 2026 சட்டசபை தேர்தலில் பா.ஜ.க ஆட்சியமைக்கும் என்றார்.



# சர்வதேச யோகா தினம்...

சர்வதேச யோகா தினம், ஜூன் 21ஆம் திகதி கொண்டாடப்பட உள்ளது. இந்நிலையில், மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத்சிங், புதுடெல்லியில் யோகா பயிற்சியில் ஈடுபட்டார்.

இந்தியா

# பாங்கான் ஏரியில் சீனாவின் 2ஆவது பாலம்




கிழக்கு லடாக்கில் உள்ள சர்ச்சைக்குரிய பான்காங் ஏரி அருகே இரண்டாவது பாலத்தை சீனா கட்டிவருவது செயற்கைக்கோள் புகைப்படம் மூலம் உறுதியாகி உள்ளது.

பீஜிங், கிழக்கு லடாக்கில், அசல் கட்டுப்பாட்டு கோடு பகுதியில் இந்திய, சீனப்படைகள் இடையே மோதல் போக்கு இருந்து வருகிறது. அங்குள்ள கல்வான் பள்ளத்தாக்கில் 2020ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி சீன படையினர் நடத்திய கொடூர தாக்குதலில் இந்திய வீரர்கள் 20 பேர் மரணம் அடைந்தனர். இதில் சீன படையினருக்கும் பெருத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டது.

அதன்பின்னர், பான்காங் ஏரியின் தெற்கு பகுதியை இந்திய இராணுவத்தினர் 2020 ஆம் ஆண்டு ஒகஸ்ட் கைப்பற்றினர். இதனால் அந்தப் பகுதிகளில் தனது கட்டமைப்பை வலுப்படுத்த சீனா முயன்று வருகிறது.

லடாக்கின் பான்காங் ஏரிப் பகுதியில் கடந்த ஜனவரி மாதம் பாலம் ஒன்றை சீன இராணுவம் கட்டியது. இதற்கு இந்திய தரப்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், லடாக்கின் பான்காங் ஏரிப் பகுதியில் சீன ராணுவம் மீண்டும் ஒரு புதிய பாலத்தைகட்டி வருவது செயற்கைக்கோள் புகைப்படம் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

கோலார்

எஜமானரின் உயிரை காப்பாற்றுவதற்கு

# பாம்பை கொன்ற வளர்ப்பு நாய் இறந்தது



கோலார் தாலுகா, பீரண்டள்ளி கிராமத்தை சேர்ந்தவர் விலாஸ். இவர், தோட்டத்து வீட்டில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். இவர், கியாசி என்ற பெயரில் ஒரு நாய் வளர்த்து வந்தார்.

இந்த நிலையில் விலாஸ் அலைபேசி பார்த்தப்படி வீட்டில் இருந்து வெளியே வந்துள்ளார். நாய் கியாசியும் அவரை பின்தொடர்ந்து வந்துள்ளது.

அப்போது அங்கு நாகபாம்பு ஒன்று ஊர்ந்து, விலாசை நோக்கி வந்துள்ளது. இதைபார்த்த நாய், நாகபாம்பை கடித்து குதறியது. இதனால் பதிலுக்கு நாகபாம்பும் நாயை தீண்டியுள்ளது. சிறிதுநேரத்தில் பாம்பு துண்டாகி செத்தது. இதையடுத்து நாய் மயக்கமடைந்து விழுந்தது.

இதைபார்த்து அதிர்ச்சி அடைந்த விலாஸ், நாயை அருகே உள்ள கால்நடை வைத்தியசாலைக்கு தூக்கி சென்றார். ஆனால் அங்கு பரிசோதித்த டொக்டர் நாய் ஏற்கெனவே இறந்துவிட்டதாக தெரிவித்தார்.

எஜமானரின் உயிரை காப்பாற்ற பாம்பை கொன்று, வளர்ப்பு நாய் இறந்த சம்பவம் அப்பகுதியில் பரிதாபத்தை ஏற்படுத்தியுள்ளது.

# மோடியை ஜப்பானில் சந்திக்கிறார் பைடன்

இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் உருவாக்கப்பட்டுள்ள குவாட் என்னும் நாற்கர கூட்டமைப்பின் உச்சி மாநாடு, ஜப்பானில் எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெற உள்ளது.

குவாட் உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஜப்பான் செல்ல உள்ளார். அப்போது அவர் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என்று அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

ஜப்பான் நாட்டிற்கு செல்லும் முன் தென்கொரியாவுக்கு செல்லும் ஜோ பைடன், அங்கு நடைபெறும் உச்சி மாநாட்டில் பங்கேற்க உள்ளதாக கூறப்படுகிறது.

ஆப்கானிஸ்தான்

# ஐ.நா ஊழியர்களும் ஹிஜாப் அணிவது கட்டாயம்




ஆப்கானிஸ்தானில் கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் அமெரிக்க படைகள் வெளியேறியதைத் தொடர்ந்து அந்நாட்டில் தலிபான்களின் ஆட்சி இடம்பெற்று வருகின்றது.

ஆரம்ப காலங்களில் தலிபான்கள் தங்களின் ஆட்சியில் பெண்களுக்கு சம உரிமை வழங்கப்படும் என உறுதி அளித்த போதும், பெண்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் வகையிலான கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து விதித்து வருகின்றனர்.

இந்நிலையில் ஆப்கானிஸ்தானில் பணிபுரியும் அனைத்து பெண்களும் ஹிஜாப் அணிவது ஏற்கெனவே கட்டாயமாக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது, ஆப்கானிஸ்தானில் உள்ள ஐ.நா. உதவிக்குழுவில் பணியாற்றும் பெண் ஊழியர்களும் இனி கட்டாயம் ஹிஜாப் அணிய வேண்டும் என தலிபான்கள் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

தென் ஆபிரிக்கா

## மீண்டும் தலை தூக்கியுள்ள இனவெறி



தென்னாபிரிக்காவில் கறுப்பின மாணவர்களின் உடைமைகளில் வெள்ளை இன மாணவர் ஒருவர் சிறுநீர் கழித்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கேப் டவுன் அருகே அமைந்திருக்கும் ஸ்டெல்லன்போஷ் பல்கலைக்கழகத்தின் குடியிருப்பிலேயே இச்சம்பவம் கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினத் தன்று கறுப்பின மாணவர்கள் தங்கி இருக்கும் அறைக்கு புகுந்த குறித்த வெள்ளை இன மாணவர் 'அம்மாணவர்களின் உடைமைகள் மீது சிறுநீர் கழித்துள்ளதுடன் அவர்களை இழிவான சொற்களால் திட்டியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்த வீடியோவானது இணையத்தில் வெளியாகி உலக நாடுகள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளதோடு இது குறித்து பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இதனையடுத்து குற்றம் சாட்டப்பட்ட அம் மாணவன் கடந்த திங்கட்கிழமை அன்று பல்கலைக்கழகத்தில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளான் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடா

## ரஷ்ய ஜனாதிபதி நாட்டிற்குள் நுழையத் தடை



நேட்டோ அமைப்புடன் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உக்ரேன் மீது ரஷ்யா கடந்த 2 மாதங்களுக்கு மேலாகத் தீவிரமாகத் தாக்குதல் நடத்தி வருகின்றது.


அதே சமயம் உக்ரேன் மீதானா ரஷ்யாவின் தாக்குதல்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக பல்வேறு நாடுகளும் ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதித்து வருகின்றன.

இந்நிலையில் கனடா பாராளுமன்றத்தில் அண்மையில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் , அந்நாட்டு அரச அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினர் தங்கள் நாட்டிற்குள் நுழையத் தடை விதிக்கும் மசோதா தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

இது குறித்து கனடாவின் பொது பாதுகாப்பு அமைச்சரான மார்க்கோ மென்டிசினோ தெரிவித்ததாவது, "அரசாங்கத்தின் நெருக்கமான கூட்டாளிகளும், முக்கிய ஆதரவாளர்களும் தங்கள் நாட்டிற்குள் நுழைய தடை விதிப்பது, ரஷ்ய நாட்டை அதன் குற்றங்களுக்கு பொறுப்பு ஏற்க செய்யும் பல்வேறு வழிகளில் ஒன்று "எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா

## வைத்தியசாலையில் நடந்த பட்டமளிப்பு



அமெரிக்காவின் லூசியானா மாகாணத்தில், பெண்ணொருவருக்கு வைத்தியசாலையில் பட்டமளிப்பு விழா இடம்பெற்ற சம்பவம் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

டில்லாரட் (Dillard) பல்கலைக் கழகத்தில் டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்த ஜடா செய்லெஸ் (Jada Sayles) என்பவருக்கே கடந்த 14 ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்த அவர் பிரசவ வலி காரணமாக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதால், அவரால் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து தகவல் அறிந்த பல்கலைக்கழக நிர்வாகத்தினர், அவருக்கு வழங்க வேண்டிய டிப்ளோமா பட்டத்தை மருத்துவமனைக்கு நேரில் சென்று வழங்கி கௌரவப்படுத்தியுள்ளனர்.

சீனா

## திட்டமிட்டு 132 பேரின் உயிரைப் பறித்த விமான விபத்து?



சீனாவில் கடந்த மார்ச் மாதம் 21 ஆம் திகதி நிகழ்ந்த விமான விபத்து குறித்து திடுக்கிடும் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

சம்பவ தினத்தன்று விமானம் இறுதிக் கணங்களில் வேண்டுமென்றே செங்குத்தாக தரையை நோக்கிச் செலுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

> **29,000 அடி உயரத்தில் இருந்து 90 பாகை கோணத்தில் தரையை நோக்கி செங்குத்தாக செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அவ் விமானத்தின் கறுப்புப் பெட்டியை ஆய்வு செய்த போதே இத் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் "விமானியின் அறையில் உள்ள யாரோ கட்டளையிட அந்த விமானம் சுமார் 29,000 அடி உயரத்தில் இருந்து 90 பாகை கோணத்தில் தரையை நோக்கி செலுத்தப்பட்டதாகவும், இதனையடுத்து சில நிமிடங்களில் தரையில் விழுந்து தீப்பிடித்து எரிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வரும் நிலையில் இச்செய்தியானது உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான்

## ஆடம்பரப் பொருட்களின் இறக்குமதிக்குத் தடை



பாகிஸ்தான் அண்மை க்கால மாகக் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வருகிறது.

குறிப்பாக நிதிப் பற்றாக்குறை, அதிகரித்து வரும் பணவீக்கம், குறைந்து வரும் அன்னிய செலவாணி கையிருப்பு மற்றும் அரசியல் நிச்சயமற்ற தன்மை போன்ற பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றது. இந்நிலையில் நாட்டின் பொருளாதார நிலை குறித்து ஆய்வு செய்ய பிரதமர் ஷபாஸ் ஷெரீப் தலைமையில் விசேட கூட்டமொன்று நடைபெற்றது.

நேற்று முன்தினம் (18) நடைபெற்ற இக் கூட்டத்தில் 'அத்தியாவசியமற்ற மற்றும் ஆடம்பர பொருட்கள் இறக்குமதிக்குத் தடை விதிக்க முடிவு எடுக்கப்பட்டது.

இலங்கை எதிர் பங்களாதேஷ்:

# வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த முதலாவது டெஸ்ட்



இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட்டானது வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், சட்டோகிராமில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான இப்போட்டியின் நேற்றைய ஐந்தாம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் 2 விக்கெட்டுகளை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இலங்கை குசல் மென்டிஸ் மூலம் வேகமாக ஓட்டங்களைச் சேர்த்தது.

இந்நிலையில், 48 ஓட்டங்களுடன் தஜியுல் இஸ்லாமிடம் குசல் மென்டிஸ் வீழ்ந்ததோடு, அடுத்து வந்த அஞ்சலோ மத்தியூஸும் ஓட்டமெதுவும் பெறாமலே தஜியுஸ் இஸ்லாமிடம் வீழ்ந்தார். பின்னர் குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் அணித்தலைவர் திமுத் கருணாரத்ன 52 ஓட்டங்களுடன் தஜியுல் இஸ்லாமிடம் வீழ்ந்தார். சிறிது நேரத்தில் தனஞ்சய டி சில்வாவும் 33 ஓட்டங்களுடன் ஷகிப் அல் ஹஸனிடம் வீழ்ந்தார்.

இதைத் தொடர்ந்து தினேஷ் சந்திமாலும், நிரோஷன் டிவெல்லவும் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைவதை உறுதிப்படுத்தியிருந்தனர். போட்டி முடிவுக்கு வருகையில் நிரோஷன் டிக்வெல்ல ஆட்டமிழக்காமல் 61, தினேஷ் சந்திமால் ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களைப் பெற்றவாறு இருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக அஞ்சலோ மத்தியூஸ் தெரிவானார்.

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 397/10 (துடுப்பாட்டம்: அஞ்சலோ மத்தியூஸ் 199, தினேஷ் சந்திமால் 66, குசல் மென்டிஸ் 54, ஒஷாத பெர்ணாண்டோ 36 ஓட்டங்கள். பந்துவீச்சு: நயீம் ஹஸன் 6/105, ஷகிப் அல் ஹஸன் 3/60, தஜியுல் இஸ்லாம் 1/107)

பங்களாதேஷ்: 465/10 (துடுப்பாட்டம்: தமிம் இக்பால் 133, முஷ்பிக்கூர் ரஹீம் 105, லிட்டன் தாஸ் 88, மஹ்முடுல் ஹஸன் ஜோய் 58, ஷகிப் அல் ஹஸன் 26, தஜியுல் இஸ்லாம் 20 ஓட்டங்கள். பந்துவீச்சு: கசுன் ராஜித 4/60, அசித பெர்ணாண்டோ 3/72, தனஞ்சய டி சில்வா 1/48, லசித் எம்புல்தெனிய 1/104)

இலங்கை: 260/6 (துடுப்பாட்டம்: நிரோஷன் டிக்வெல்ல ஆ.இ 61, திமுத் கருணாரத்ன 52, குசல் மென்டிஸ் 48, தினேஷ் சந்திமால் ஆ.இ 39, தனஞ்சய டி சில்வா 33 ஓட்டங்கள். பந்துவீச்சு: தஜியுல் இஸ்லாம் 4/82, ஷகிப் அல் ஹஸன் 1/58)

போட்டியின்நாயகன்: அஞ்சலோ மத்தியூஸ்



ஐ.பி.எல்:

## கொல்கத்தாவை வென்ற லக்னோ

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி. எல்), மும்பையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கொல்கத்தா நைட் றைடர்ஸுடனான போட்டியில் லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற லக்னோவின் அணித்தலைவர் லோகேஷ் ராகுல், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ, குயின்டன் டி கொக்கின் ஆட்டமிழக்காத 140 (70), லோகேஷ் ராகுலின் ஆட்டமிழக்காத 68 (51) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 210 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், சுனில் நரைன் 4-0-27-0 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

பதிலுக்கு 211 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா, நிதிஷ் ரானா 42 (22), அணித்தலைவர் ஷ்ரேயாஸ் ஐயர் 50 (29), சாம்பில்லிங்ஸ் 36 (24), ரிங்கு சிங்க் 40 (15), சுனில் நரைன் ஆட்டமிழக்காமல் 21 (07) ஓட்டங்களைப் பெற்று போராடியபோதும் 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 208 ஓட்டங்களையே பெற்று இரண்டு ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில், மொஹ்சின் கான் 4-0-20-3 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக குயின்டன் டி கொக் தெரிவானார்.

இந்நிலையில், இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நடப்புச் சம்பியன்களான சென்னை சுப்பர் கிங்ஸும், ராஜஸ்தான் றோயல்ஸும் மோதவுள்ளன.

## ஓய்வு பெற்ற உபமெயாங்க்



சர்வதேச கால்பந்தாட்டப் போட்டிகளிலிருந்து தமது முன்களவீரரான பியர்-எமெரிக் உபமெயாங்க் ஓய்வு பெற்றுள்ளதாக காபொன் கால்பந்தாட்ட சம்மேளனம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

காபோனுக்காக 13 வருடங்கள் விளையாடிய பின்னர் 32 வயதான உபமெயாங்க், தனது முடிவை கடந்த செவ்வாய்க்கிழமை கடிதம் மூலம் அறிவித்ததாக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

காபோனுக்காக 72 போட்டிகளில் விளையாடி 30 கோல்களை உபமெயாங்க் பெற்றுள்ளார். காபோனுக்காகப் பெறப்பட்ட அதிகூடிய கோல்கள் இதுவேயாகும்.

> **72போட்டிகளில் விளையாடி 30 கோல்களை பெற்றுள்ளார். காபோனுக்காகப் பெறப்பட்ட அதிகூடிய கோல்கள் இதுவேயாகும்.**

## மட்டு அணியில் காவத்தமுனை அல் அமீன் வித்தியாலய மாணவன் அப்னாஸ்

அஸ்ஹர் இப்றாஹீம்



இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சம்மேளனம் ஒழுங்கு செய்திருந்த மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை மட்ட 19 வயதுக்குட்பட்ட அணிக்கான தெரிவில் காவத்தமுனை அல் அமீன் வித்தியாலய மாணவனும் ஓட்டமாவடி வளர்பிறை விளையாட்டுக்கழக வீரருமான அப்னாஸ் மட்டக்களப்பு மாவட்ட 19 வயதுக்குட்பட்ட அணிக்கான தேர்வில் சிறப்பாக செயற்பட்டு மாவட்ட அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 20 மே 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.